Registered as a News . aper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.


முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை (31.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 031



பதுளை ஹல்தமுல்ல, கொஸ்லந்த மீரியபெத்த பிரதேசத்திற்கு நேற்றுக்காலை விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மண்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சந்தித்து நிலைமையைக் கண்டறிந்தார்.

கொஸ்லந்த ஸ்ரீகணேஸா தமிழ் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் இருக்கும் இடத்திற்குச் சென்ற ஜனாதிபதி அங்குள்ள நலன்புரிச் செயற்பாடுகள் தொடர்பில் விசாரித்தார். இதன்போது மக்களுக்குத் தேவையான பொருட்களை ஜனாதிபதி வழங்கினார்.

## துயரத்தில் பங்கெடுக்கிறோம்



பதுளை மாவட்டம் கொஸ்லந்த மீரிய பெத்த பிரதேசத்தில் நடந்த இயற்கை அனர்த்தங்களால் இடர்பட்டு, இழப்புகளை சந்தித்த மலையக மக்களின் துயரத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து உடன்டி மீட்பு பணிகளில் ஈடுபடுமாறும், தேவையான நிவாரணங்களை வழங்குமாறும் உத்தரவிட்டிருப்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்றும் பார்வையிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு, ஜனாதிபதியின் பணிப்புரைகளில் எந்தவித காலதாமதத்துக்கும் இடம் கொடுக்காமல் அதிகாரிகள் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மோடியும் கவலை

இலங்கையின் கொஸ்லாந்த மீரியபெத்த தோட்டத்தில் மண் சரிவில் உயிரிழந்த மக்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் மண்சரிவில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகமும் அறிவித்துள்ளது.

## மண்சரிவு பாதிப்பு . உதவ இந்தியா தயார்

மண் சரிவால் பாதிக்கப்பட்ட மலையகப் பகுதி மக்களுக்கான உதவிகளை இந்தியா வழங்கவுள்ளது. இது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா, வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்துப் பேசினார். இதன்போது அவர் இலங்கைக்குத் தேவையான உதவிகள் குறித்து கேட்டறிந்தார் எனத் தெரிகிறது.

# அனர்த்த பாதிப்புக்கு உதவ அமெரிக்கா தயார்

(கொழும்பு)

மலையகத்தில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளது.

இந்தப்பகுதிகளில் இடம்பெறும் மீட்புப்பணிகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் அமெரிக்கா ஆர்வமாக உள்ளது.

அதேவேளை, கொஸ்லாந்த பகுதியில் இடம்பெற்ற பாரிய மண்சரிவு அனர்த்தம் தொடர்பில் அமெரிக்கா தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளது.

கொஸ்லாந்த மண்சரிவு தொடர்பில் ஐக்கிய அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிதி மோசடி அம்பலம்

### வடக்கு முதல்வரின் நிர்வாகத்தில் முறைகேடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணமுதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் கீழ் உள்ள வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட புறநெகும செய்றதிட்டத்தில் சுமார் 130 மில்லியுன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாரிய நிதி மோசடி தொடர்பான தகவல்கள் இப்போது மெல்ல மெல்ல கசிய ஆரம்பித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று மாலை அவசர அவசர செய்தியாளர் மாநாடு ஒன்றைக்கூட்டி இம்மோசடி குறித்து தனக்கு கிடைத்த தகவல்களை வெளியிட்டார்.

பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் மற்றும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜெகூ, யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் ஆகியோரே இம்மோசடி

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடு தழுவிய உறுப்பினர்களை ஜனாதிபதி 17இல் சந்திப்பார்

நாடு தழுவிய ரீதியில் நீதியமைச்சின் கீழ் மத்தியஸ்த சபை உறுப்பினர்களை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி அலரிமாளிகையில் இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது.

மேற்படி சந்திப்பில் கலந்து கொள்ளும் மத்தியஸ்த சபை உறுப்பினர்களது விபரம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆளுநர்- ஜப்பான்தூதுவர் சந்திப்பு



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபுஹிட்டோ ஹோபு அடங்கிய குழுவினர் நேற்றுப் பிற்பகல் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது வடக்கின் அபிவிருத்தி மற்றும் பிற விடயங்கள் குறித்து வடக்கு ஆளுநருடன் ஜப்பான் தூதுவர் கலந்துரையாடினார். (பா)

## மாகாணசபை நிதி மோசடி திங்கள் முதல் விசாரணை

### ஆளுநர் தகவல்

வடமாகாண நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற நூறு மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி மோசடி சம்பந்தமான விசாரணை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிப்புரையை அவர் விடுத்துள்ளார்.

நெல்சிப் திட்டத்தில் இடம் பெற்ற நூறு மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி மோசடியுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் பொறியியலாளர் ஒருவர் ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டுள்ளார். இந் நிலையில் குறிப்பிட்ட பொறியியலாளர் வடமாகாணத்தை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இவர் மீதான விசாரணையை மேற்கொள்வதற்கு கட்டடத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் சிக்கி ஒருவர் பலி ஓட்டுமடத்தில் நேற்று

யாழ். ஓட்டுமடம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். சைக்கிளில் வீதியால் சென்றவர் மீது வேகமாக வந்த மினிபஸ் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னால் சென்ற இ.போ.ச. பஸ்ஸை முந்துவதற்காக துரத்திச் சென்ற மினிபஸ்ஸே இவரைப் பந்தாடியது என வீதியால் பயணித்தவர்கள் தெரிவித்தனர். நாவாந்துறையைச் சேர்ந்த கந்தையா நிக்சன் (வயது-41)

(19) ஆம் பக்கம் பார்க்க

## டிசம்பரில் சூரியப்புயல் பூமிக்கு ஆபத்து இல்லை

எதிர்வரும் டிசம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை உலகம் முழுவதும் தொடர்ந்து இருளாக இருக்குமென நாசா நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த இருள் சூழ்ந்த நாட்களில் ஓர் பயங்கர சூரிய மண்டல புயல் வீசுமெனவும் அதனால் ஏற்படுகின்ற மாற்றத்தால் தூசி, துகள்கள் நிரம்ப போவதால் சூரிய ஒளி பூமிக்கு வருவது தடைப்படும் என்றும் அவர் கூறுகின்றார். நாசாவின் தலைவர் சார்ஸ் போல்டன் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சூரிய மண்டலப் புயலால் பூமி இருளில் மூழ்கினாலும் எந்தவித பாதிப்பும் பூமிக்கு ஏற்படாது. இதற்கு யாரும் அஞ்ச வேண்டியது இல்லை. இது 250

(19) ஆம் பக்கம் பார்க்க



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**FACULTY OF ARTS**

University of jaffna will entertain applications upto **08.11.2014** for the post of Visiting Demonstrator in Geographical Information System (**GIS**) and Remote Sensing (Planning/Geography)

**Qualifications :**

A Special degree in the field of planning/Geography

Salary : Rs.600/- per hour

Application forms and ather details may be obtained from the office of the Deputy Registrar / Academie Establishments, University of Jaffna. SriLanka, either in person or by post, an a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are. requested to send a money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University web site **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna.

Applicants from the University system / Government Departments / Corporations and statutory Board should channe their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation Only short listed applicants will be called for Interview.

**Registrar.**

2014.10.30 (C/3584)


## இணையவழி கற்கை நெறிக்கு சமூகம் முழுமையாக மாறுகிறது

# சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் தெரிவிப்பு

(வட்டுக்கோட்டை)

இன்னும் எம் மண்ணில் தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது கல்வியும், அறமுமாகும்.

அதைத்தான் தமிழ்த்தாயும் தனது உருவத்தின் ஊடாக கருத்துக் கூறுகின்றாள்.

இவ்வாறு இந்துசமய குருமார் ஒன்றிய சர்வதேசத்திற்கான தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவும்-நிறுவுனர் தினநாளும் கல்லூரி முதல்வர் சி.தனஞ்செயன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய சிவஸ்ரீ. சபா வாசுதேவக் குருக்கள் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய மிலேனியம் ஆண்டுகளில் மாணவர் சமூகம் பாடசாலைக்குச் செல்லாமலே இணைய வழி மூலம் பாடங்களைக் கற்றுத் தேறக்கூடிய அளவிற்கு விஞ்ஞான யுகம் மேலோங்கிவிட்டது.

ஆனால் அந்தளவுக்கு இங்கு இன்னும் நாம் மாறவில்லை. எனினும் குருவின் கீழான செவி வழிக் கல்வியே மெய்த்திறனான கல்வியை வழங்கி எதிர்கால சமுதாயத்திற்கு ஏற்ற விற்பன்னர்களாக மாறுகின்றது.

மாணவர்கள் ஒவ்வொருவரும் நல்ல விடயங்களிலும் பற்று வைக்க வேண்டும். விரும்பத்தகாத, வேண்டத்தகாதவைகள் எமக்கு அருகில் இருந்தால் கூட அவற்றுள் பற்று வைக்காமல், கல்வியில் பற்றுதல் வேண்டும்.

கல்வியில் பற்று வைத்தவர்கள் சாதனையாளர்களாகப் போற்றப்படுகின்றார்கள். இதற்கு மாறாக இன்று சில மாணவர்கள் போதைப்பொருள், மதுப்பாவனைக்கு உட்பட்டு அதிலிருந்து மீள முடியாது தானும் அழிந்து தன்குடும்பத்தையும் சீரழிக்கின்ற நிலை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இன்றைய எமது மாணவச் செல்வங்கள் எதிர்கால கல்விமான்களாக, சிற்பிகளாக, சிந்தனையாளர்களா வரவேண்டுமாயின் அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விக்கு மேலாக நற்சிந்தனைகளை, ஆலோசனைகளை வழங்க வேண்டிய உன்னத நிலையில் இருக்கின்றார்கள் என்றார் சிவஸ்ரீ வாசுதேவக்குருக்கள்.

இந்நிகழ்வில், ரட்ணம் நிதிய தலைவர் கலாநிதி.இ.நித்தியானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சிறப்புரையை உபபீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரப் பிள்ளையும், கௌரவ அதிதியாக சங்கென் கட்டட நிர்மான திட்டமிடல் பொறியியலாளர் ஜெ.ரெரன்சன், கலாநிதி கா.கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# பரிசளிப்பு தின நிகழ்வும் ஆசான்கள் கௌரவிப்பும்

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரித் தின விழாவும், கல்லூரியில் கற்பித்த மூத்த ஆசான்களைக் கௌரவித்தல் நிகழ்வு நாளை காலை கல்லூரியின் சே.வைத்திலிங்கம் துரைச்சாமி மண்டபத்தில் கல்லூரியின் முதல்வர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலகத்தின் திட்டப் பணிப்பாளரும், கல்லூரியின் பழைய மாணவியுமான திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய பணிப்பாளர் தி.யோண் குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திருமதி திலகவதி பாலகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் மூத்த ஆசிரியர்களைக் கௌரவித்தல், மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (05)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்ஸியக் குழு நடாத்தும் வரவு-செலவுத்திட்டம் 2015 ஒரு கண்ணோட்டம் பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்.பொதுசன நூலகத்தின் சிற்றுண்டிச் சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி முன்னாள் ஊழியர் தோழர் சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலை ஆசிரிய ஆலோசகர் ஏ.சி.ஜோர்ச் ஆரம்ப உரையை நிகழ்த்தி ஆரம்பித்து வைக்கவுள்ளார் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (68)

# பொதுக்கூட்டம்

(வவுனியா)

இலங்கை அரச சேவை பகிரங்க ஓய்வூதியர் சங்கத்தின் கௌரவிப்புக்கான பொதுக்கூட்டமொன்று இன்று வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் தலைவர் எஸ். சுப்பிரமணியம் (ஜே.பி.) தலைமையில் இடம்பெறவுள்ள இந்த கூட்டத்தில் அகில இலங்கை அரச ஓய்வூதியர் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுணில் கெட்டியாராச்சி பிரதம விருந்தினராகவும், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திரா, ஜனச வங்கியின் விற்பனைப் பகுதி உதவி முகாமையாளர் சாமீர் டியனகே, யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்க சமாசத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.(05)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2576 திகதி 29-10-2014

ஆங்கில எழுத்து: O

வெற்றி எண்கள் 31 41 58 67 போனஸ் இல: 50

ஜக்பொட் பரிசு ரூ.14,816,775/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 212109 | 20/- | 4,242,180/- |
| 2 இல | 15337 | 100/- | 1,533,700/- |
| 3 இல | 307 | 1,000/- | 307,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8642 | 40/- | 345,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 607 | 1,000/- | 607,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,816,775/- | - |
| 1 இல + போனஸ் இல | 10074 | 100/- | 1,007,400/- |
| 2 இல + போனஸ் இல | 476 | 500/- | 238,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 425 | 200/- | 85,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 248107 | | 11,222,960/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.11.01 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 15,396,550/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/3531)


# பரிசளிப்பு விழா

(கரணவாய்)

வடமராட்சி கற்கோவளம் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் பொ.அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள் ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய அதிபர் ஆ.வடிவேல், புதிய யாழ்.வைத்தியசாலை இயக்குநர் சி.குலேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18)

# நூல் வெளியீடு

கரணவாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் பரிசில் நாளும், நூல் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திக்கம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ.சேதுராசா, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் தே.தேவதயாளினி, திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் க.இரவீந்திரன், யாழ்.பல்கலைக்கழக குடும்ப மருத்துவத்துறை மருத்துவபீட விரிவுரையாளர் டாக்டர் சு.குமரன், சங்கத்தின் லண்டன் இணைப்பாளர் யோ.ராஜ்மோகன், ஓய்வுநிலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3800)

# சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சமாசத்தின் 90 ஆவது சர்வதேச சிக்கன தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் 90 ஆவது சர்வதேச சிக்கன தின விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத்தின் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கை சிக்கன கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரு மான உபுல் சாந்த அல்விஸ், பேராசிரியர் சி.க.சிற்றம் பலம், வடமாகாண கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், இலங்கை சிக்கன கடன் வழங்குகூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சணச அபிவிருத்தி வங்கியின் வட கிழக்கு பிராந்திய முகாமையாளர், வடமாகாண சணச வங்கி, சணச காப்புறுதி நிறுவன முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இலங்கையின் சமகால பொருளாதார அபிவிருத்தியில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் முக்கியத்துவம் என்னும் பொருளில் யாழ்.பல்கலைக் கழக சந்தைப்படுத்தல் துறை தலைவர் கு.இரட்ணம் உரை வழங்கவுள்ளார்.



காரைநகர் கருங்காலி போசுட்டி முருகன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கந்தசஷ்டி விரத நிறைவாக சூரசமஹார நிகழ்வு... (50)

# 'காட்டுவேம்படி' வீதியை புனரமைக்க கோரிக்கை

அச்சுவேலி, பத்தமேனி காட்டு வேம்படி வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின் றது.

குறித்த வீதியை தினமும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், மற்றும் ஏனைய அலுவலக வேலைகளுக்கு செல்வோர் பயன்படுத்தி வருகின்றனர். புனரமைப்பின்றிக் காணப்படும் இந்த வீதியால் பயணிப்பது என்பது தமக்கு துன்பம் மிகுந்த செயல் என வீதியைப் பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.

வீதியின் நடுவே படர்கற்கள் மற்றும் சிறு கற்கள் என்பன பரவிக் காணப்படுகின்றன. இதனால் தமது வாகனங்களும் விரைவில் பழுதடையும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதாகவும் பயணிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

இதேவேளை யாழ்குடாநாட்டில் உள்ள அனைத்து பிரதான வீதிகள் மற்றும் சிறு வீதிகள் கூட புனரமைக் கப்பட்டுள்ள நிலையில் இந்த வீதியினை சம்பந்தப்பட்ட தரப்பினர் கண்டும் காணாதுமாக உள்ளமை தமக்கு வேதனைதரும் விடயமாக உள்ளது என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (85)

## சைவபரிபாலனசபை நடாத்தும் சைவ நெறித்தேர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபை வருடாந்தம் நடாத்தும் அகில இலங்கை சைவநெறித் தேர்வு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை நேர அட்டவணைக்கு ஏற்ப நடாத்தப்படுவதுடன் பாடசாலைகள் வினாத்தாள்களை . இணைப்பு நிலையங்களில் பெற்று பரீட்சை முடிவின் பின் விடைத்தாள்களை அவ் இணைப்பு நிலையங்களில் ஒப்படைக்குமாறு தேர்வுச் செயலாளர் பொ.கமநலாதன் அறிவித்துள்ளார்.(66)

## தரவட்டசெயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய உடுவில் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டச்செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இச்செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (66)

# ஒன்றுகூடல் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி முஸ்லீம்களின் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இனங்களின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணி முதல் 6 மணி வரை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நல்லிணக்கத்திற்கான சவால்கள், நல்லிணக்கத்திற்கான வாய்ப்புக்கள், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம், குழு உருவாக்கத்தின் அவசியம் போன்ற விடயங்கள் பற்றி கருத்து பரிமாற்றம் இடம்பெறவுள்ளது.

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித்தீர்க்கலாம் –20




இனப்பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு, தீர்வு காணுகிறதுக்கு தமிழ்பேசும் மக்கள்தான் முழுமையாக முயற்சிக்க வேணும்.

இதுக்கு முதலில் என்ன மாதிரியான தீர்வு தமிழ் பேசும் மக்களுக்கு பொருத்தமானது எண்டு முடிவு எடுக்க வேணும். அப்பிடியெண்டால் முஸ்லீம் மக்களோட பேசி அல்லது தமிழர்களும் முஸ்லீம்களும் கலந்து பேசி தங்களுக்கு என்ன மாதிரியான தீர்வு தேவை எண்டதைத் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் இதுவரையில் இப்பிடியொரு காரியம் நடந்ததாக இல்லை. முயற்சி கூட எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

ஆனால் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம், வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசம் இந்த பிரதேசத்துக்கு சுயாட்சி வேணும் எண்டெல்லாம் ஆண்டுக்கணக்காக பேசிக்கொண்டே இருக்கிறம். இந்த வடக்கும் கிழக்கும் தனியே தமிழர்களின் தாயகம் மட்டுமல்ல இது முஸ்லீம்களின் பாரம்பரியமான பிரதேசமும் ஆகும்.

ஆகவே முஸ்லீம்களை உள்ளடக்காமல் அவர்களுடைய விருப்பங்களை அறியாமல் அவர்களுடைய தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாமல் அவர்களோடு உடன்பாடு காணாமல் தமிழர்கள் ஒருபோதுமே தமக்கான தீர்வைக் காண முடியாது.

இலங்கை இனப்பிரச்சினை எண்டது தனியே தமிழ் சிங்களப் பிரச்சினை அல்ல. அதற்கு அப்பால் இனம், மதம், மொழி, பிரதேசம், மக்கள் எண்டு பல விடயங்களை உள்ளடக்கியது. இதில் ஆகக் குறைந்தபட்சம் வடக்கு கிழக்கில் வாழுகிற ரண்டு சமூகங்களான தமிழர்களும், முஸ்லீம்களும் கூட கலந்து ஒரு தீர்மானத்துக்கு வரவில்லையெண்டால் எப்படி அரசியல் தீர்வை எட்ட முடியும்?

ஆகவேதான் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணவேணுமெண்டால் அதற்கான ஆரம்ப வேலைகளை – அடிப்படையான வேலைகளைச் செய்ய வேணும் என்கிறேன்.

இதுவரையில இப்படியொரு முயற்சியை விசுவாசமாக எவரும் முன்னெடுத்ததாக இல்லை. தனியே தமிழர்கள் மட்டும் தான் பேசமுடியும், தமிழருக்கு மட்டுமே பிரச்சினை, தமிழருக்கே தீர்வு எண்டு வெங்காயத்தனமாக சிந்திச்சால் இந்தப் பிரச்சினை பரம்பரை வியாதியாக தொடருமே தவிர ஒருபோதுமே தீராது.

தமிழர்களுக்குள்ள பெரிய பிரச்சினை என்னவெண்டால் அவர்கள் எப்போதுமே தங்களை உயர்த்திப் பாப்பதுதான். இந்த 'எண்ணம் பெரிசு கோவணம் சிறுசு' எண்ட வியாதியால் பிற சமூகங்களோடு முகங்கொடுக்க முடியாமல் தனித்திருக்கினம். இதாலதான் இவை எப்பவும் ஏகப்பெரிது எண்ட எண்ணத்தோடு இருக்கினம். இந்த எண்ணம் பல்லின சமூகங்கள் வாழுகின்ற ஒரு சூழலுக்கு ஒத்து வராது.

இதில வேடிக்கையான – நாங்கள் கவனிக்க வேண்டிய ஒரு பெரிய உண்மை இருக்கு.

இந்த உலகம் முழுக்க தமிழர்கள் பரந்து வாழுகினம். ஏன் இலங்கையில் கொழும்பு போன்ற இடங்களிலும் பிற சமூகங்களுடன் இணங்கியே அல்லது சமாளித்தே வாழுகினம். உலகத்தின் எல்லா இடங்களிலும் தங்களை அஜஸ்ட்பண்ணி வாழத்தெரிந்த தமிழர்கள் இலங்கையின் வடக்கு கிழக்கில் மட்டும் தனித்தமிழ்வாதம் பேசுவதும், தூய்மைவாதம் பேணுவதும் நியாயமா–குமா?

இப்படி ஏராளம் காரணங்கள் இந்த இனப்பிரச்சினைத் தீர்வில் முட்டுக்கட்டையாக உள்ளன. இதையெல்லாம் சீர்ப்படுத்தாமல் எதிர்த்தரப்புடன் எப்படிப் பேச முடியும்?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தடைக்கற்களும், முட்டுக்கட்டைகளும் தமிழர்களுடைய காலடியிலேயே கிடக்கும் போது பிறரை எப்படி குற்றம் சாட்ட முடியும்?

இதையெல்லாம் விளங்கிக்கொண்டு சீர்ப்படுத்தி நெறிப்படுத்துவது யார்?

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## சும்மா இருக்கும் திறமரிது காண்!

முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் என்கிறார் வள்ளுவர். முயற்சி இல்லாமல் எதையும் பெற்று விட முடியாது என்பது தெளிவு.

நமக்கோ குறைகள் இருக்கின்றன; தேவைகள் இருக்கின்றன; வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகள் சரிவரக் கிடைக்காமல் இன்னும் அவலப்படுவோர் இருக்கிறார்கள்; அதிகாரங்கள் பகிரப்பட்ட ஒரு தீர்வின் தேவை இருக்கிறது. இப்படிப் பல தேவைகளோடுதான் நமது மக்கள் காத்திருந்தபடி உள்ளார்கள்.

தமிழ் மக்களின் தலைவர்களென்றும் ஏக பிரதிநிதிகள் என்றும் சொல்லிக் கொள்வோர் என்ன செய்கிறார்கள்? மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, அவலங்களோடுள்ள அவர்களது நிலைமையை மாற்ற என்ன முயற்சியைச் செய்கிறார்கள்?

சிங்கள அரசாங்கம் எதையும் தராது என்பதைச் சொல்லி இரு தரப்பு மக்களுக்கும் விதவிதமாக வெறுப்பேற்றுவதையே ஒரே முயற்சியாகத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

இதுதானா மக்களின் அவலத்தைப் போக்கும் முயற்சி? இந்த நாட்டுக்குள் செய்ய எதுவுமில்லை; இந்தியாவோ அமெரிக்காவோ இன்னும் முகம் தெரியாத ஒரு சர்வதேசமோ வெகுண்டெழும் வரை கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு காத்திருங்கள் என்று சொல்லிவிட்டு அடுத்த வீராவேச அறிக்கை தயாரிப்பதுதானா இவர்கள் செய்யும் முயற்சி?

இந்தியாவும் அமெரிக்காவும் மற்றுமுள்ள சர்வதேசமும் எதை எடுத்துத் தரும், எப்போது எடுத்துத் தரும், எப்படி எடுத்துத் தரும் என்ற விளக்கங்களையாவது எப்போதாவது சொல்லியிருக்கிறார்களா?

ஐ.நா.வோ சர்வதேசமோ அண்ட சராசரமோ வந்து என்ன தீர்வை எடுத்துத் தரவேண்டும் என்றாவது இவர்கள் கேட்டிருக்கிறார்களா?

வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையைக் கொடுத்த போதும் இவர்கள் எடுக்கவில்லை. பின்னர் சந்திரிகா ஏறக்குறைய சமஷ்டித் தீர்வைக் கொடுத்த போதும் எடுக்கவில்லை. இந்த அரசுடன் பேச்சையும் தொடர முடியாது என்று முறித்துக் கொண்டார்கள்.

சரி, அனைத்துக் கட்சிகளும் அடங்கிய தெரிவுக்குழுவிலாவது போய்ப் பேசுங்களேன் என்றால், “அங்கும் என்னத்தைப் பேசி.... என்னத்தைத் தீர்வெடுத்து.... இந்த அரசாங்கம் ஒண்டையும் தராது...” என்று ராகம் இழுத்துவிட்டுப் பம்முகிறார்கள்.

இதைச் சொல்லத்தானா தலைவர்கள்? நீங்கள் செய்யக் கூடியதாக வேறு முயற்சிகளே இல்லையா?

அரசோடு கோவித்துக்கொண்டு உங்களுக்குத் தெரிவுக்குழுவுக்குப் போக முடியாவிட்டால், மக்கள் அப்படியே அவலத்தில் இருக்க வேண்டியதுதானா? அரசுடன்தான் பிரச்சினை என்றால், ஏனைய கட்சிகளுடன் பேசி நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு முயற்சி செய்து பார்க்கலாமல்லவா.

ஐ.தே.க. உங்களது நெடுநாளைய நண்பன்தானே. அரசாங்கக் கட்சிக்குள்ளும் தீர்வுக்கு ஆதரவானவர்கள் இருக்கிறார்கள். இடதுசாரிகள் இருக்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸ், மலையகக் கட்சிகள் என்று தீர்வுக்கு ஆதரவான சக்திகளை ஒருங்குதிரட்ட என்ன முயற்சிகளைச் செய்தீர்கள்?

எவரும் சரிவர மாட்டார்கள் என்பதுதான் உங்கள் பதிலா? சர்வதேசத்தை சந்திரனாகக்காட்டி, நிலா நிலா வா வா என்று மக்களை ஏமாற்றிப் பாடிக்கொண்டிருப்பது தேர்தல் வாக்குகளுக்காக மட்டும்தானே.

இந்த நாட்டில் எந்தத் தீர்வு வருவதாக இருந்தாலும் அது சிங்கள மக்களின் ஆதரவோடும்தான் வந்தாக முடியும் என்ற யதார்த்தத்தைப் பலரும் சுட்டிக் காட்டுகிறார்களே! குறைந்த பட்சம் அந்த மக்களிடமாவது போய் இந்த நாட்டின் சமாதான சக வாழ்வுக்குத் தேவையானதை விளக்க முயற்சியைச் செய்யலாமே!

- ஆசிரியர்.

# வடக்கிற்கான பயணக்கட்டுப்பாடு பிரிவினையை மேலும் வலுப்படுத்தும்

### – சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை –

(கொழும்பு)

வடக்கில் வெளிநாட்டுப் பிரஜைகள் பயணங்களை மேற்கொள்வது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் பிரிவினையை மேலும் வலுப்படுத்தும் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கிற்கு வெளிநாட்டுப் பிரஜைகள் பயணம் செய்வது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் சிறுபான்மை சமூகத்தின் மீதான மற்றுமொரு மனிதாபிமானமற்ற அநீதியான ஒடுக்குமுறையாக கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பை சம்பாதித்துக் கொடுக்கும் என சுட்டிக்காட்டியுள்ளது.

பயணக் கெடுபிடிகளை ஒரு வகையில் பொருளாதாரக் கட்டுப்பாடாகவே கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் இலங்கையில் ஒடுக்கப்படுவதாகவும் இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதப்படுவதாகவும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது யாழ்ப்பாண பொருளாதாரத்தை மோசமாக பாதிக்கும் என தெரிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வடக்கு, கிழக்கை விட்டு வெளியேறியவர்கள் வலுவான பொருளாதார நிலைமையைக் கொண்டிருப்பதாகவும் அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள இவ்வாறான கெடுபிடிகள் தடையாக அமையும் என சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் வடபகுதிக்கான பயணங்கள் தொடர்பில் பல நாடுகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

# அரசியலில் பெண்களின் பங்களிப்பு இலங்கையில் வரையறுக்கப்பட்டுள்ளது

### – உலக பொருளாதார பேரவை அறிக்கை –

(கொழும்பு)

இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் வரையறுக்கப்பட்ட வகையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. பால் நிலை சமத்துவ இடைவெளி தொடர்பில் உலக பொருளாதார பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களின் அரசியல் வலுவூட்டல் தொடர்பில் இலங்கை 50ஆவது இடத்தை வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் பதவி வகித்தல் குறித்த சுட்டியில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

142 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை இந்த வகையீட்டில் 136ஆம் இடத்தை வகிக்கின்றது. பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்பிலான வகையீட்டிலும் இலங்கை 109ஆம் இடத்தை வகிக்கின்றது.

அரசியல், பொருளாதாரம், ஊழியப்படை போன்ற துறைகளில் இலங்கை பாரிய பின்னடைவை எதிர்நோக்கிய போதிலும், பெண்கள் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் சிறந்த நிலையில் காணப்படுவதாக பேரவை மேலும் தெரிவித்துள்ளது.

# பௌத்தபிக்குகளை கவர்ந்து தேர்தலுக்கு ஆதரவு தேட முயற்சி

### அரசு மீது ஜே.வி.பி.குற்றச்சாட்டு

பௌத்த பிக்குகளை கவர்ந்து அதன் மூலம் ஜனாதிபதித்தேர்தலுக்கு ஆதரவு திரட்டும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் பல்வேறு வழிகளில் பிரசாரத்தில் ஈடுபட்டுவருவதாக ஜே.வி.பி.யின் தொழிற்சங்கத் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பௌத்த பிக்குகளுக்கு வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை ஏற்பாடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். நூறு பௌத்த விகாரைகளின் பீடாதிபதிகள், ஆசிய பௌத்த நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் பௌத்த பிக்குகளின் ஆதரவினை திரட்டும் நோக்கிலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் பல பௌத்த பிக்குகள் அதிருப்தி வெளியிட்டுள்ள காரணத்தினால் இவ்வாறான ஓர் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# இ.போ.ச. பேருந்துக்கு கல்வீச்சு தாக்குதல்

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மீது கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் அடையாளம் தெரியாதோரால் கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன், தினமிரவு 8 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணிகளுடன் வந்துகொண்டிருந்த பஸ் மீதே கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும், பஸ் மீது கல்வீச்சு நடத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

கல்வீச்சுக்கு இலக்கான இலங்கை போக்குவரத்து சபைக்குச்சொந்தமான பஸ், கிளிநொச்சி பொலிஸாரின் பொறுப்பில் உள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தொலைபேசி திருத்தும் பயிற்சி


இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் சுயதொழில் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறியொன்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.ரஜனிகாந்த் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதுக்குடியிருப்பு ஆதிபராசக்தி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான குறித்த பயிற்சியானது நேற்று வரை நடத்தப்பட்டது.

திறமையான வளவாளர்களைக் கொண்டு இந்தப் பயிற்சி நெறியானது நடத்தப்பட்டதுடன் இதன் மூலம் இளைஞர்கள் சுயமாக தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும், இது போன்ற பல தொழில் பயிற்சி நெறிகளை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் முன்னெடுத்து வருவதாகவும் உதவி ஆணையாளர் எஸ்.ரஜனிகாந்த் மேலும் தெரிவித்தார்.

**கூட்டமைப்புத் தலைவர்களின் சந்தர்ப்பவாத அரசியல் தான் தமிழ் அரசியல் அரங்குக்குத் தமிழீழக் கோரிக்கையை மீண்டும் கொணடு வந்தது. இதன் விளைவாக அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற நிலை தென்னிலங்கையில் நிலவுகின்றது. இந்த நிலையில் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டோம் என்ற வெறும் பேச்சு எவரிடமும் நம்பிக்கையைத் தோற்றுவிக்கப் போவதில்லை. அதாவது இக் கூற்றில் நம்பகத்தன்மை இல்லை. உச்ச நீதிமன்றம், நாடாளுமன்றம் ஆகியவற்றிலும் ஊடக வியலாளர் சந்திப்புக்களிலும் ஒன்றைக் கூறிவிட்டு நடைமுறையில் வேறு விதமாகச் செயற்படுகின்றார்கள் என்பதே இவர்களுக்கு எதிரான விமர்சனம். நடைமுறையில் நம்பகத்தன்மை ஏற்படும் வகையில் செயற்படுவதன் மூலமே இந்தக் குற்றச்சாட்டிலிருந்து விடுபட முடியும்.**



# தமிழீழக் கோரிக்கையை எப்போது கைவிட்டீர்கள்?

**சங்க்ர சிவன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடும் பட்சத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதாக வடபகுதி விஜயத்தின் போது ஜனாதிபதி கூறினார். அதற்குப் பின் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாக அறிக்கைகள் வெளியிட்டார்கள். சம்பந்தன் ஒருபடி மேலே போய் கூட்டமைப்புக்காக மாத்திரமன்றிப் புலம்பெயர் தமிழர்களுக்காக வும் பேசினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர்ந்து வாழும் பெருமளவிலான தமிழர் களும் ஈழக்கோரிக்கையைக் கைவிட்டுவிட்டனர் என்று ஒரு நேர்காணலில் அவர் கூறினார்.

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஒருவருடத்துக்குள் அக்கோரிக்கையைக் கைவிட்டு மாவட்ட சபையை ஏற்பதற்கு முன்வந்தது அதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தவில்லை ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்ற அடிப்படையிலேயே செயற்பட்டது. ஆயுதப் போராட்டக் குழுக்களும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு ஜன நாயக அரசியலுக்குத் திரும்பின. புலிகள் மாத்திரம் விதிவிலக்கு. அவர்கள் மாத்திரம் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடாமல் இருந்தார்கள்.

இந்த நிலையில் தமிழ் அரசியல் அரங்குக்கு மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கை வந்தது எப்படி? தமிழ்த் தலைவர்களின் சந்தர்ப்பவாத அர சியல் தான் மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கொண்டு வந்தது.

சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத்திட்டம் நடைமுறைக்கு வரு வதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருந்தார்கள். அவர் களுடைய வழமையான பாணியில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் களை அத் தீர்வுத்திட்டத்தை எதிர்க்க வைத்தார்கள்.

அவ்வளவோடு நிற்காமல் இத் தலை வர்களின் அரசியல் செயற்பாடு களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். இத் தலை வர்களின் நாடாளுமன்றப் பிரவேசம் புலிகளின் அங்கீகாரத்தில் தங்கி இருக்கும் நிலை ஏற்பட்டது. புலிகளின் ஆலோசனைக்கமைய இவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்படத் தொடங்கினார்கள். தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்ட அமைப்புகளைச் சேர்ந்த இத் தலை வர்கள் அந்தக் கொள்கையைத் தூக்கி எறிந்துவிட்டுச் சந்தர்ப்பவாதிகளாக மாறிப் புலிகளின் நிகழ்ச்சி நிரலை ஏற்று நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட் டார்கள். புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதன் மூலமும் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற் பட்டதன் மூலமும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழக் கோரிக்கையை மீண்டும் அர சியல் அரங்குக்குக் கொண்டுவந்தார்கள். இவர்களின் சந்தர்ப்பவாதம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட் டத்தை வெகுதூரம் பின்னுக்குக் தள்ளியது.

சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் கிராமியக் கருத் தரங்குகள் பரவலாக நடைபெற்றதும் பேரினவாதிகளின் பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் பெருமளவில் எடு- படாததுமான காலகட்டத்திலேயே கூட்டமைப்புத் தலைவர்கள் புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்படத் தொடங்கினார்கள். இது தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கையைச் சிங்கள மக்கள் சந்தேகக் கண்ணோடு பார்ப்பதற்கும் பேரினவாதிகளின் பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடுவதற்கும் வழிவகுத்தது.

புலிகளின் நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்ட தலைவர்களில் பலர் சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத்திட்டத்துக்குப் பகிரங்கமாக ஆதரவளித்தார்கள். இவர்களுள் சம்பந்தன் முக்கியமானவர். ஐக்கிய இலங்கையில் அதிகாரப் பகிர்வுக்குப் பகிரங்கமாக ஆதரவளித்து வந்தவர்கள் கடைசி நேரத்தில் அந்தத் தீர்வுத்திட் டத்தை நிராகரித்துத் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படத் தொடங்கியமை சிங்கள மக்களிடம் சந்தேகத்தைத் தோற்றுவித்தது இயல்பானதே. தமிழ்த் தலைவர்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கைகள் தனிநாட்டுக்காக முத லாவது படி என்ற சந்தேகம் சிங்கள மக்களிடம் ஆழமாக வேரூன்றியது. இந்த நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திய பேரினவாதிகள் அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் ஓரளவு வெற்றி கண்டனர்.

கூட்டமைப்புத் தலைவர்களின் சந்தர்ப் பவாத அரசியல் தான் தமிழ் அரசியல் அரங்குக்குத் தமிழீழக் கோரிக்கையை மீண்டும் கொண்டு வந்தது. இதன் விளைவாக அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற நிலை தென்னிலங்கையில் நிலவுகின்றது. இந்த நிலையில் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்ற வெறும் பேச்சு எவரிட மும் நம்பிக்கையைத் தோற்றுவிக்கப் போவதில்லை அதாவது இக் கூற்றில் நம்பகத்தன்மை இல்லை.

புலம் பெயர்ந்து வாழும் பெரும்பாலான தமிழர்களும் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாகச் சம்பந்தன் கூறுகின்றார். புலம் பெயர் அமைப்புகளுக்கூடாகவே புலம் பெயர் தமிழர்களின் கருத்துக்கள் பெருமளவில் வெளிவருகின்றன. இந்தப் புலம்பெயர் அமைப்புகளுடன் கூட்டமைப்புத் தலைமைக்கு நேச உறவு உண்டு. எந்தெந்த புலம் பெயர் அமைப்புக்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டன என்று சம்பந்தனால் பெயர் குறிப்பிட்டுக் கூற முடியுமா?

புலிகளின் தோல்விக்குப்பின் கூட்டமைப்பு ஜனநாயக அரசியலுக்கு வந்த போது ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு தான் எங்கள் கொள்கை என்று சம்பந்தன் கூறினார். பல தடவை- கள் இவ்வாறு கூறினார். இப்படி அவர் கூறியதற்குப் பின்னர் தான் தமிழரசுக் கட்சியின் பதினான்காவது தேசிய மகாநாடு மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த மகாநாட்டு நிறைவில் தலைமை யுரை ஆற்றிய சம்பந்தன் "ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்புக்குள் எமக்கான உரிமையைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை நாம் உலக சமூகத்துக்கு நிரூபிக்க வேண்டும்" எனக் கூறினார். இது பிரிவினைக் கோரிக்கை இல்லையா? ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு எனக் கூறியவர் இப்படி யும் பேசினார். தமிழீழக் கோரிக்கை யைக் கைவிட்டுவிட்டதாக இப்போது சொல்கிறார். எங்கே இருக்கின்றது நம்பகத்தன்மை?

கூட்டமைப்பு பிரிவினையைக் கோர வில்லை என்று உச்சநீதிமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் கூறியதாகச் சம் பந்தன் சொல்கிறார். இது தான் கூட்ட மைப்புக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு. உச்ச நீதிமன்றம், நாடாளு மன்றம் ஆகியவற்றிலும் ஊடகவிய லாளர் சந்திப்புக்களிலும் ஒன்றைக் கூறிவிட்டு நடைமுறையில் வேறு விதமாகச் செயற்படுகின்றார்கள் என்பதே இவர்களுக்கு எதிரான விமர்சனம். நடைமுறையில் நம்பகத் தன்மை ஏற்படும் வகையில் செயற் படுவதன் மூலமே இந்தக் குற்றச்சாட் டிலிருந்து விடுபட முடியும்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் பலர் இன்னும் பிரிவினை பற்றியும் தமிழீழம் பற்றியும் பகிரங்கமாகப் பேசுகின்றார் கள். சிவாஜிலிங்கம், சிறீதரன், அனந்தி சசிதரன் என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது பிரபாகரன் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதாகச் சிறீதரன் கூட்டங்களிலும் பேசுகின்றார். தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்று சிவாஜிலிங்கம் மாவீரர் தினத்தன்று கைதடி யில் பகிரங்கமாகக் கூறினார். இவை தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டதற்கான அடையாளமா?

சம்பந்தனும் சுமந்திரனும் எவ்வளவு தான் பூசி மெழுகினாலும் கூட்டமைப் பில் ஒவ்வொருவர் ஒவ்வொரு திசையில் பயணிக்கின்றார்கள். பிரிவினையைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலைப்பாட்டில் சிறீதரன், சிவாஜிலிங்கம் கொம்பனி. தீர்வு எதையும் முன்வைக்காமல் வெறுமனே சாத்வீகப் போராட்டம் என்கிறார் மாவை. எந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சாத்வீகப் போராட்டம்? "தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக முன்வைத் துள்ளது" என்று 2013.06.26 ஆம் திகதி பாரிஸ் நகரில் ஒரு இணையத் தளத்துக்குக் கூறிய சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒரு வருடத்துக்குப் பின் அரசியல் தீர்வுத் திட்டமொன் றைத் தயாரிப்பதற்கு மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோருகின்றார். தீர்வுத்திட்டத்தை ஏற்கனவே முன்வைத் திருந்தால் மக்களிடமிருந்து ஆலோ சனைகளைக் கோர வேண்டிய தேவை என்ன? இப்படித்தான் கூட்ட மைப்பு காலத்துக்கொரு கதை பேசி ம்க்களை ஏமாற்றுகின்றது.

சம்பந்தனும் சுமந்திரனும் ரணிலைத் திருப்திப்படுத்துவதற்காக ஜனாதி பதிக்குச் சவால் விடுவதைவிட்டுக் கூட்டமைப்பை முதலில் ஒழுங்குபடுத்த வேண்டும். நேரத்துக்கொரு விதமாக ஆளுக்கொரு கதை பேசுவதை முடிவுக்குக் கொண்டு வந்து எல்லோரையும் ஒரே குரலில் பேச வைக்க வேண்டும். பிரிவினையைக் கைவிட்டுவிட்டதாக ஒரே குரலில் கூற வேண்டும். உங்கள் இருவரை யும் தவிர மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிவினையைக் கைவிட்டுவிட்டதாகப் பகிரங்கமாகப் கூறுவதற்குத் தயங்கும் நிலையை மாற்ற வேண்டும்.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு தான் உங்கள் கொள்கை என்றால் அதற்கான தீர்வுத்திட்டத்தை முதலில் முன்வையுங்கள். அரசியல் தீர்வுக்கான தீர்வுத்திட்டத்தை முன் வைக்காமல் நாங்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம் என்று உச்சநீதிமன்றத்திலும் நாடாளு மன்றத்திலும் பத்திரிகைகளிலும் கூறுவது நம்பிக்கையைத் தோற்று விக்காது. தீர்வுத்திட்டத்தை முன் வைக்காமல் பிரிவினையைக் கைவிட்டுவிட்டோம் என்று எவ்வளவு தான் சொன்னாலும் எப்போது கைவிட்டீர்கள் என்ற கேள்வியே மிஞ்சி நிற்கும்.

# சீன நீர்மூழ்கி கப்பல் விவகாரம் இந்தியா எதனையும் கூறவில்லை

## என்கிறார் கடற்படைப் பேச்சாளர்



(கொழும்பு)

சீன நீர்மூழ்கி கப்பல் இலங்கை கடற்பரப்பில் வந்து சென்றமை தொடர்பாக இந்தியா தனது அதிருப்தியை தெரிவித்துள்ளதாக ஊடகங்களே செய்திகளை வெளியிட்டுள்ளன. மாறாக இந்தியா எதனையும் தெரிவிக்கவில்லையென கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை கடற்படைத் தளபதியின் இந்திய விஜயம் மற்றும் சீன நீர்மூழ்கி கப்பல் இலங்கை வந்தமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை இந்து சமுத்திரத்திற்கு மத்தியில் அமைந்துள்ளது. பூகோள ரீதியிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. பல்வேறு நாடுகளின் கடற்படை கப்பல்களும் நீர்மூழ்கி கப்பல் களும் நல்லெண்ண அடிப்படையில் வந்து செல்கின்றன. இது பொதுவான ஒரு விடயமாகும். குறித்த நாடொன்றின் கப்பல் கள் மட்டும் இங்கு வரவில்லை.

நாடு எது என்பதை விட நாடுகளுக்கு இடையிலான நல்லெண்ண உறவுகளை பலப்படுத்துவது தொடர்பிலேயே கவனம் செலுத்தப்படும். அந்த அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு அதாவது இதுவரை 206 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்கள் இங்கு வந்து சென்றுள்ளன. இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ரஷ்யா, ஜப்பான், ஸ்பெய்ன், பங்களாதேஷ், இந்தோனேஷியா, தாய்லாந்து, துருக்கி, மலேசியா, தென்கொரியா, புருணை, மாலைதீவு, இத்தாலி, பிரான்ஸ், ஈரான், சீனா, ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், சீஷெல்ஸ் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளிலிருந்தே இந்த 206 கப்பல்களும் வந்து சென்றுள்ளன.

இதன்படி 2010 ஆம் ஆண்டு 36 கப்பல்களும், 2011 ஆம் ஆண்டு 49, 2012 இல் 34, 2013 இல் 48, 2014 ஆம் ஆண்டு இதுவரை 39 கப்பல்கள் என்ற அடிப்படையிலேயே மேற்படி 206 கப்பல்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து சென்றுள்ளன.

அதேநேரம், இலங்கை கடற்படைத் தளபதி இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் போது இரு நாட்டு உறவுகளை மேலும் பலப்படுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான பயிற்சிகள் தொடர்பிலேயே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஆராயப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் கடற்படை தளபதியின் விஜயம் முடிவுற்று நாட்டிற்கு மீண்டும் திரும்பிய பின்னரே கூறமுடியும்.

இலங்கைக்கு வந்து சென்ற கடற்படைக் கப்பல்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது மாதமொன்றுக்கு நான்கு கப்பல்கள் என்ற அடிப்படையில் வந்து செல்கின்றன. அதேபோன்று வர்த்தக நோக்கத்திற்காக அம்பாந் தோட்டை பகுதி ஊடாக நாளொன்றுக்கு 275 தொடக்கம் 300 கப்பல்கள் வந்து செல்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 300 பாடசாலைகளுக்கு 10 வருடத்தில் மூடு விழா

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகள் 9662 இலிருந்து 9905 வரை அதிகரித்துள்ளதாக கல்வி அமைச்சர் ஊடகங்களில் காட்சிப்படுத்தினாலும், கடந்த 10 வருடங்களில் 300 இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் நாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரத் தரவுகளின் மூலம் எடுத்துக் காட்டினாலும் உண்மையில் புதிய பாடசாலைகள் உருவாக்கப்படவில்லை. கலவன் பாடசாலைகளாக இருந்தவற்றில் ஆரம்பப் பிரிவை பிரித்து தனியான பாடசாலையாக அவற்றைப் பதிவு செய்துள்ளனர்.

இதனாலேயே பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. புதிய பாடசாலைகள் உருவாகவில்லை. இந்த 300 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அச்சங்கத்தின் செயலாளர் ஜே.ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு

# லங்கா சமசமாஜ கட்சி இரண்டாக பிளவுறும் அபாயம்

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்குவதென எடுக்கப்பட்ட தீர்மானத்துடன் லங்கா சமசமாஜக் கட்சி இரண்டாக பிரியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் கொள்கைக்கு எதிரான யோசனைகளை கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் அவசர மாக முன்வைத்து சிலர் அதற்கு அனுமதியைப் பெற்றுள்ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதென சிலரினால் கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவாக 25 பேரும் எதிராக 13 பேரும் வாக்களித்தனர்.

மூவரின் சுய விருப்பின் பே[illegible] கொண்டுவரப்பட்ட இந்த யோசனையை நாம் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டோம். இது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிக்க வேண்டும் என்ற எமது கட்சியின் கொள்கைக்கு எதிரான ஒரு தீர்மானமாகும் எனவும் சட்டத்தரணி லால் விஜேநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் ஸ்திரமான நிலையை ஜனாதிபதியே ஏற்படுத்தினார்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியவர் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசியல் ஸ்திரத் தன்மை மற்றும பொருளாதார அபிவிருத்தி ஆகியனவற்றின் காரணமாக புதிய முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி சமூகத்தின் ஒரு தொகுதி மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் இந்த விடயங்கள் நடைபெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றுவதே ஜனாதிபதியின் பிரதான இலக்கு என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்றுதான் சீனாவும் படிப்படியாக அபிவிருத்தி அடைந்து இன்று அமெரிக்காவை விடவும் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

### இலங்கையில் நல்லிணக்கம் மலர

# காணாமற் போனோர் குறித்து தகவல்களை வெளியிட வேண்டும்

## பொதுநலவாய செயலர் வலியுறுத்து



இலங்கையில் நீண்டகால நல்லிணக்கத்தை ஏற்படுத்த காணாமற் போனவர்கள் தொடர்பாக உரிய தகவல்களை அறிந்துகொள்ள வேண்டுமென பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் ஷர்மா தனது இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பில் விளக்க மளிப்பதற்காக நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதன் ஊடாக, வெற்றி கொண்ட சமாதானத்தை பாதுகாக்க முடியும். இலங்கையில் நிரந்தர நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பிரயத்தனங்களை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியுள்ளேன். காணாமற்போயுள்ளவர்கள் தொடர்பிலான தகவல்களை உரிய முறையில் அறிந்து கொள்ளாமல் நீண்டகால நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறிந்து கொள்ளும் வரை அந்த வடுக்களை அழிக்க முடியாது என்றும் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# மூன்று வருடங்களில் உலகவங்கி 88,192 மில்லியன் ரூபா கடனுதவி



(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களில் மட்டும் இலங்கைக்கு உலக வங்கி சுமார் 84,185 மில்லியன் தொகை கடனாக வழங்கியுள்ளது. அத்துடன் 4,007 மில்லியன் ரூபா தொகை மானிய உதவியாகவும் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே நேற்றுமுன்தினம் நாடாளுமன் றத்தில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய ஒத்துழைப்பு சிரேஷ்ட அமைச்சர் மற்றும் நிதியமைச்சின் பிரதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இது பற்றி மேலும் தெரிவிக்கையில் இலங்கைக்கு கடந்த 2011 ஆம் ஆண்டில் 16539 மில்லியனும் 2012 ஆம் ஆண்டில் 41798 மில்லியன் ரூபாவும் மற்றும் 2013 ஆம் ஆண்டில் 25 849 மில்லியன் ரூபாவும் பெற்றுக்கொண்டுள்ளது.

அத்துடன் இந்த மொத்த கடன்களின் வருடாந்த வட்டி வீதமானது 763 மில்லியன் ரூபாவாகும். ஆனால் வழங்கப்பட்ட மானியங்களுக்கான எந்தவிதமான வட்டிவீதமும் அறவிடப்படவில்லை. இந்த கடன்தொகையின் மூலம் பல விதமான திட்ட வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மண்சரிவு பாதிப்பு உதவியளிக்கும் ஐ.நா.



(கொழும்பு)

மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளன என ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒத்துழைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. இதனை ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் ஸ்டீபன் துஜாரிக் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற மணிசரிவு காரணமாக 6 பேர் உயிரிழந்தனர். 300 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமற்போயுள்ளனர். எனவும், 150 வீடுகள் தரை மட்டமாகின என்றும் தேசிய இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது.

இந்தப் பாதிப்புக்களில் இருந்து இலங்கை மீள்வதற்கு ஐக்கிய நாடுகளின் மனிதாபி மான அலுவலகம் இலங் கைக்கு உதவ தயாராகவுள்ளது.

இதற்காக அரசாங்கத்தை ஐ.நா. தொடர்பு கொண்டுள்ளது. இதேசமயம் இலங்கை செஞ்சிலுவை சங்கம் தனது முதலுதவி குழுக்களை தயார்படுத்தியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமும் தயார் நிலையிலுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்திற்கு லயன்ஸ்கழகங்களின் வலயத்தலைவர் லயன் சி.ஹரிகரன் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு போரால் பாதிக்கப்பட்டு தந்தையை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார்.மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணத்தை வலயத்தலைவர் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் காணலாம்.

# மீசாலை பஸ்தரிப்பு நிலையத்தால் விபத்துக்களை எதிர்நோக்கும் மக்கள்

(மீசாலை)

மீசாலை பழைய புகையிரத நிலைய சந்தியில் காணப்படும் பஸ்தரிப்பு நிலையம் வீதிக்கு நெருங்கிய நிலையில் காணப்படுவதால் பஸ்ஸிற்காக காத்திருக்கும் பயணிகள் பல்வேறு சிரமங்களையும் விபத்துக்களையும் சந்திக்க நேரிடுவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி குறித்த பஸ்தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் பஸ்கள் வீதியின் நடுவே நிறுத்தப்படுவதால் வீதியில் பயணிகள் ஏனைய வாகனங்கள், சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பஸ்தரிப்பு நிலையத்தை குறித்த இடத்திலேயே சற்று பின் நகர்த்தி அமைப்பதன் மூலம அனைவரும் நன்மை பெற முடியும் என தெரிவிக்கும் மக்கள் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இவ் விடயம் தொடர்பில் கவனம எடுப்பார்களா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர். (66)

# பாடசாலை வைரவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் வைரவிழா நிகழ்வு மிக விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரியில் தொடக்க காலத்தில் இருந்து கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களை நினைவுகூர்ந்து மதிப்பளிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பிரதேசத்தில் விவசாயக் குடியிருப்பான வட்டக்கச்சி பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் இக் கல்லூரி அளித்த பங்களிப்பு உயர்வானதாகும்.

வட்டக்கச்சி மகாவித்தியாலயமாக இருந்த இப் பாடசாலை மிக அண்மையில் தான் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டிப்பது குறிப்பிடதக்கது. (90)

# சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் செயன்முறைப்போட்டி

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம வருடம் தோறும் நடாத்திவரும் செயன்முறைப் போட்டி எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகள் மத்தியபிரிவு, மேற்பிரிவு எனும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 600 போட்டியாளர்கள் தோற்றவுள்ளனர்.

கோலம்போடுதல் போட்டி மு.ப 9 மணிக்கும், மாலைகட்டுதல் போட்டி மு.ப 10.15 மணிக்கும் தோரணம்பின்னுதல் போட்டி மு.ப.11.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இவர்களுக்கான அனுமதிஅட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், போட்டியாளர்கள பொருட்களுடன் குறித்த நேரங்களுக்கு சமூகம் தரவேண்டும் எனவும் சைவசமய அபிவிருத்திக்கழக பரீட்சைச் செயலர் சு.சீறிகாந்தன் அறிவித்துள்ளார்.

இதேவேளை தரம் - 1, தரம் - 2 மாணவர்களுக்கு நடைபெறவுள்ள நீதிநூல் மனனப் போட்டியின் இறுதிச்சுற்றில் சுமார் 77 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

# சிறுவர்தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு கோப்பாய் கோட்டமட்ட பாடசாலை மர்ணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு - கட்டுரை

வி.தேனுஜா - (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), ப.கம்ஷா (வாதரவத்தை விக்கினேஸ்வரா), ர.லதுர்சன் (அச்சுவேலி/ஆரம்ப பாடசாலை)

கீழ்ப்பிரிவு - கவிதை

இ.சுருதிகா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), சு.தீபிகா (அச்சுவேலி புனிததெரோசள் மகளிர் கல்லூரி), சி.சிவாஜி (உரும்பிராய் சந்தீரோதய வித்தியாலயம்)

• கீழ்ப்பிரிவு - பேச்சு

பி.சேயோன் (அச்சுவேலி ஆரம்ப பாடசாலை), த.திவாகரன் (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), ப.விஸ்ணுயன் (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)

மத்தியபிரிவு - கட்டுரை

ஜே.மாதுரிகா (உரும்பிராய் இந்துக் கல்லூரி), அ.சகிதா ( புத்தூர்சோமஸ்கந்தா கல்லூரி), கௌ.சஜீவன் (கோப்பாய் சரவண பவானந்தா வித்தியாலயம்)

மத்தியபிரிவு - பேச்சு

க.சுஜீபா (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்), டோ.றொசானி (உரும்பிராய் இந்துக்கல்லூரி), ந.வேனுஜா (அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயம்)

மேற்பிரிவு - கட்டுரை

ஸ்ரீ.சியானி (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), வே.ஐந்துஜா (அச்சுவேலி புனித தெரேசாள மகளிர் கல்லூரி), ர.பிரின்ஸ்சலா (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி)

மேற்பிரிவு - கவிதை

ர.முகிர்த்தனா (அச்சுவேலி/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி),த.சயனுகா (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), பா.வானுஜா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

மேற்பிரிவு - பேச்சு

கு.தீபிகா (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), க.திவ்யா (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), அ.அனற்பானுஷா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) (08)

# சிறுவர் சந்தை

(நெல்லியடி)

நெல்லியடி செலான் வங்கியின் ஏற்பாட்டில் சிறுவர் சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை இமையாணன் பாடசாலையில் நடைபெற்றது.

இச் சிறுவர் சந்தையில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டதுடன் இச்சந்தை மூலம் மலிவான விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்ததாக பொதுமக்கள் இதன் போது தெரிவித்தனர். (18)

# முரசின் இன்றைய பலன்

(31.10.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 14 ஆம் திகதி.
மரணயோகம்/ அட்டமி.
திருவோணம் பி.இ.12.33 பின் அவிட்டம்
இராகு காலம 10.33 - 12.03 வரை. சுபநேரம 06.03 - 07.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளியூர் பயணத்திற்கான யோகம் கிட்டுதல். எதிர்பாராது விபத்து நேரிடல். |
| ரிஷபம் | அனுபவப்பட்டதினால் பணம் கொடுக்காது விடல். தோஷத்திற்கு பரிகாரம் தேடல். |
| மிதுனம் | உறவினர் மகிழ்வேற்படல். அரசுப்பணி கிடைக்கும் நம்பிக்கை வலுப்படுதல். |
| கடகம் | நுளம்புத் தொல்லையை அகற்ற நடவழிக்கை விபத்திலிருந்து அருந்தப்பு. |
| சிம்மம் | நேர்மையும் உண்மையும் கடைப்பிடித்ததினால் குறைகள் அற்றுப்போதல். சகஊழியர்களுடன் சுமூகநிலை பேணப்படல். |
| கன்னி | மனைஅமைக்கத் திட்டமிடல். விருது பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடல். |
| துலாம் | நிர்வாகங்களில் பங்கபற்ற உறுப்பினராகப் போட்டியின்றித்தெரிவு செய்யப்படல். உணவுக்கட்டுப்பாட்டினால் ஆரோக்கியம் பேணல். |
| விருச்சிகம் | விவாகமுயற்சி தாமதமாதல். காலாவதியான பொருட்களை கொள்வனவு செய்யாது விடல். |
| தனுசு | எதிர்பாராத செயலால் கஷ்டத்தை எதிர்கொள்ளல். வாக்குவாதம் ஏற்படல். |
| மகரம் | மனவாட்டம் ஏற்படல். பயணத்தை ஒத்தி வைத்தல். |
| கும்பம் | கடனை மீளப்பெறச் சென்ற போது வாக்குவாதம் ஏற்படல். ஆயுர்வேத மருந்தால் நோயைக் குணப்படுத்த விளைதல். |
| மீனம் | முன்னர் செய்த பழியும் பாசமும் இப்பொழுது வருந்துவதாக எண்ணித்துயரடைதல். பொருளாதாரக் கஷ்ட நிலை ஏற்படல். |

# கீர்த்தனன் நினைவு கூடைப்பந்து இறுதிப் போட்டிகள் நாளை

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரியினால் இரண்டாவது ஆண்டாக நடாத்தப்படும் கீர்த்தனன் நினைவுக் கிண்ண கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் நாளை மாலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

18 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்படும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மருதனார்டம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இராமநாதன் கல்லூரி அணி 37-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியன.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 29-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்துக் கல்லூரி அணி 68-34 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாட்சாலை அணியும் மோதின. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 42-32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்கள் நாளை மாலை நடைபெறவுள்ளதாகவும் இந் நிகழ்வில் கூடைப்பந்து ஆர்வலர்கள், விளையாட்டு இரசிகர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு வீர,வீராங்கனைகளை உற்சாகப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

(93)

## காஸ்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள்கால் பந்தாட்ட சங்கம் நடாத்தும் 19

வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான கால் பந்தாட்டப் பேர்ட்டி எதிர்வரும் 6,7 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரிய-ில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக ளில் பங்குகொள்ள விரும்பும், அணிகளை யாழ். மாவட்ட பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கத் துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## சகல பிரிவுகளிலும் யாழ். மத்தி வெற்றி

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக் கெதிரான நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி சகல பிரிவுகளிலும் வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியிலான கால்பந்துப் போட்டி கடந்த வாரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14, 16, 18, 20 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன. 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி அடுத் தடுத்து கோல் மழை பொழிந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி செயற்பட்டபோதிலும் அதன் முயற்சி இறுதி வரை கைகூடவில்லை. நிறைவில் யாழ். மத்திய கல்லூரி அணி 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கிலும், 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கிலும் யாழ். மத்திய கல்லூரி அணியே வெற்றி பெற்றது. ஒட்டுமொத்தமாக நான்கு பிரிவுகளிலும் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. (93)

## விபுலானந்தன் நினைவு கூடைப்பந்தாட்டம் கொக்குவில் இந்து, யாழ். இந்து மூன்றாமிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடாத்தப்பட்ட அமரர் விபுலானந்தன் நினைவுக் கூடைப்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகள் பிடித்துக் கொண்டன.

வடமாகாண பாட்சாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் மூன்றாமிடத்திற்கான ஆட்டங்கள் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பெண்கள் பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணியும் மோதின. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 38-27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

ஆண்கள் பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 55-43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்ட்து. (எஸ்.பி.)

## கண்காட்சிப் பேட்டி; சனத் அணி வெற்றி

சனத் ஜெயசூரியாவின் அதிரடி விளாசலின் மூலம் இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றனா் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் அமைக்கப் பெற்ற புற்றரை ஆடுகள அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது வடக்கு-கிழக்கு இணைந்த அணிக்கும் இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் அணிக்குமிடையிலான கண்காட்சிப் போட்டி ஒன்று நடைபெற்றது. 12 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் இலங்கை முன்னாள் வீரர்கள் அணி சார்பாக சனத் ஜெயசூரியா, முத்தையா முரளிதரன், உப்புள் சந்தன, புஷ்பகுமார போன்ற வீரர்கள் பங்குகொண்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வடக்கு-கிழக்கு இணைந்த அணி 12 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எட்வேட் எடின் 20, தயாபரன் 26, தினேஷ் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முரளிதரன், ஜெயசூரியா, உப்புள் சந்தன, புஷ்பகுமார ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு93 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை முன்னாள் வீரர்கள் அணி 11.1 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சனத் ஜெயசூரிய மூன்று சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 36, டி. சில்வா 11, எரிக் உபசாந்த் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சஞ்சீவ் இரண்டு, பகீதரன், நோபேட், துவாரகசீலன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.(எஸ்.பி., 42)

## புனிதர்களின் போர்; ஹென்றியரசர் வெற்றி



(இளவாலை)

சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிகளுக்கிடையில் வருடா வருடம் நடைபெறும் புனிதர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை ஹென்றியரசர் கல்லூரி அணி சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டி கடந்த 27ஆம் திகதி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

14, 16, 18, 20 ஆகிய நான்கு வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் ஹென்றியரசர் கல்லூரி அணி இரு பிரிவுகளில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

14 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென்றியரசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 மற்றும் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இத்துடன் இப்போட்டிகள் சமநிலையில் நிறைவு பெற்றன.

இறுதியாக நடைபெற்ற 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாக மோதியபோதிலும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு கிடைத்த வாய்ப்பை அணி உரிய முறையில் பயன்படுத்தி கோல் ஒன்றை போட்டுக் கொண்டது. இதற்கு பதிலடி கொடுக்கும் முனைப்புடன் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதி வரை போராடியபோதிலும் பலன் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. நிறைவில் சென்றியரசர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றன.

இதன் அடிப்படையில் இரு பிரிவுகளில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வெற்றி பெற்று இவ் வருடத்திற்கான வெற்றியை தனதாக்கியது. (48)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எஸ்.பி.)

## கிரிக்கெட் வீராங்கனைகளிடம் பாலியல் இலஞ்சம் ஆராய்வதற்கு நால்வர் கொண்ட குழு நியமனம்

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனைகளிடம் பாலியல் இலஞ்சம் கேட்பது குறித்து கிரிக்கெட் தேர்வுக் குழுவும் முகாமைத்துவ இலங்கை கிரிக்கெட் சபை ஆராயவுள்ளன.

இதற்காக நால்வர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பிரத்ம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.



அதேவேளை இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை எனவும் ஊடகங்களில் வெளியான செய்திகளையடுத்து இது குறித்து ஆராய்வதற்கே தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதற்கான குழுவில் இலங்கை கிரிக்கெட் சபையின் உபதலைவர் மொஹான் டி சில்வா, செயலாளர் நிஷாந்த ரணதுங்க, உதவிச் செயலாளர் ஹிரந்த பெரேரா, தேசிய கிரிக்கெட் தேர்வுக்குழுத்


பூமிதனை அழிவு கொள்ளாமல்
கழிவென்று புறந் தள்ளாமல்
எவர்க்கும் பயன் பல தரும் வகையில்
புத்தாக்கம் படைத்திடலாமே...
இன்றைய உலகில் சிக்கன தினத்தை
அர்த்தமுள்ளதாய் கொண்டாடுவோம்.
(C/3583)
PEOPLES BEST LOVED BANK OF THE YEAR
2006
2007
2008
2010
2011
2012
2013
2014
PEOPLES SERVICE BRAND OF THE YEAR
2008
2010
2011
2012
2013
2014
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
www.peoplesbank.lk
AA- Brand Finance Rating, AA+ Fitch Rating
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

# கூட்டமைப்பை நெருங்கிவரும் ஆபத்து!

யதீந்திரா கட்டுரையிலிருந்து.


தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது புலிகளின் ஆயுத பலத்தின் வாயிலாக தமிழர் அரசியல் அரங்கிற்கு அறிமுகமான ஒன்றாகும். அந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பதே வன்முறை அரசியலை நியாயப்படுத்துவதற்கான ஜனநாயக வடிவமாகவே தமிழ் சூழலுக்கு அறிமுகமாகியது. இதன் காரணமாகவே தெற்கின் அரசியல் தரப்பினர் கூட்டமைப்பை புலிகளின் பதிலியாக பார்க்க முற்பட்டனர்.

தெற்கின் கடும்போக்குவாதிகளின் அப்படியான புரிதலுக்கு, கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துவரும் சிறிதரன் போன்ற கடும்போக்குவாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது தெரிவித்துவரும் கருத்துக்களும் ஒரு காரணமாகும்.

முன்னாள் இயக்கங்கள் தொடர்பில் கூட்டமைப்பில் உள்ளவர்கள் மாறுபாடான அபிப்பிராயங்களை தெரிவிக்கும் போது சிறிதரன் போன்றவர்கள் அது பற்றி எதுவும் பேசுவதில்லை. ஒரு வேளை வன்முறை அரசியலிலிலும் நல்ல வன்முறை அரசியல் - கெட்ட வன்முறை அரசியல் என்றவாறான வேறுபாடுகள் இருக்கின்றன போலும்.

எனவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது மிதவாதிகளது முயற்சியாலோ அல்லது தற்போது கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துவரும் ஏனைய முன்னாள் போராட்ட இயக்கங்களின் முயற்சியாலோ உருப்பெற்ற ஒன்றல்ல. மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் முயற்சியினால் உருவாகிய ஒன்றாகும்.

புலிகள் பலமாக இருந்தவரைக்கும் கூட்டமைப்பில் யார் பெரியவர், யாருக்கு அதிகமான நாடாளுமன்ற பிரதிநிதிகள் இருக் கின்றனர் போன்ற விவாதங்கள் ஏதும் எழவில்லை. ஆனால், புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்தே இப்படியான விவாதங்கள் மேலெழுந்து முரண்பாடுகள் தோன்றின.

கடந்த ஐந்து வருடங்களாக அவ்வப்போது இந்த முரண்பாடு பூதாகரமாக மேலெழுவதும், பின்னர் அடங்கிப் போவதும், மீண்டும் திடீரென்று மேலெழுவதாகவும் தொடர்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைசார் அரசியலுக்கு தலைமைதாங்குவதாக முகம்காட்டும் கூட்டமைப்பானது, தனக்குள் இருக்கின்ற பிரச்சினையையே நிவர்த்தி செய்யமுடியாமல் தடுமாறுகின்றதெனின் அதன் பொருள் என்ன?

இங்கு கவனிக்க வேண்டிய விடயம், கூட்டமைப்பிலுள்ள எந்தவொரு கட்சியையும் தமிழ் மக்கள் தெரிவு செய்யவில்லை மாறாக, கூட்டமைப்பையே தெரிவு செய்திருக்கின்றனர். எனவே, கூட்டமைப்பை ஒரு வலுவான அரசியல் கட்சியாக மாற்ற வேண்டுமென்னும் கோரிக்கையில் தவறில்லை. மக்களின் ஜனநாயக ரீதியான முடிவுக்கு சட்ட அந்தஸ்தை வழங்குவது தொடர்பில் முரண்பட ஏதும் இல்லை. அந்த வகையில் நோக்கினால் கூட்டமைப்பு பதிவு விவகாரத்தில் மக்கள் விரோத நோக்கம் எதுவும் இல்லை. ஒரு உயர்ந்த நோக்கமே தெரிகிறது.

கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக உருமாற்றும் விவகாரம் வெறும் உள் முரண்பாடாக தொடருமாயின், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயர் வேறு எவரதும் கைகளுக்கு செல்வதற்கான வாய்ப்பை உதாசீனம் செய்ய முடியாது.

கூட்டமைப்பு பதிவு விவகாரம் கடந்த ஐந்து வருடங்களாக இழுபறிப்படும் நிலையில், ஒரு சிலர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரை தங்களுக்கு தருமாறு தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இது பற்றி நான் அறிந்த தகவல்களின்படி, கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தங்களது நிலைப்பாட்டை தேர்தல் ஆணையாளருக்கு வழங்காவிடின், அவர் வேறு ஒருவருக்கு குறித்த பெயரை வழங்கக் கூடிய சாத்தியம் அதிகமாக காணப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் இது பற்றி ஏலவே கூட்டமைப்பினருக்கு அறிவுறுத்தியுமிருக்கிறார். ஏனெனில், தற்போதிருக்கின்ற நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயருக்கு சட்டரீதியாக எவரும் உரித்துக் கூற முடியாது. தேர்தல் ஆணையாளர் தொடர்ந்தும் கூட்டமைப்பின் தலைவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கவும் மாட்டார்.

அந்த வகையில் பார்த்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனும் பெயருக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

---

# கே.வி. மகாதேவன்

20

- பி.ஜி.எஸ்.மணியன் -



கர்நாடக இசை உலகிலும் சரி, திரை இசை உலகிலும் சரி இரண்டு ராமநாதன்களின் பாவம் மறுபேச்சில்லாமல் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

ஒருவர் எம்.டி. ராமநாதன். மற்றவர் ஜி. ராமநாதன்.

கர்நாடக இசை உலகில் எந்தப் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்தவர்களானாலும், எவரது பாணியைப் பின்பற்றுபவர்களானாலும் அனைவருமே "பாவபூர்வமாகப் பாடுவதில் முதலிடம் எம்.டி. ராமநாதனுக்குத்தான்" என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார்கள்.

திரை இசையில் அதே போல ஜி. ராமநாதன்.

பாவபூர்வமாக பாடுவது என்றால் என்னவென்று இன்றைய தலைமுறைப் பாடகர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த "எஜமான் பெற்ற செல்வமே" பாடலை ஒரு முறை கேட்டுப்பார்த்தால் புரிந்துவிடும்.

நன்றாக வாயைத் திறந்து பாடுவது என்பார்களே அதாவது ஆங்கிலத்தில் "Full throated voice" என்பார்களே அப்படிப் பாடியிருக்கிறார் ஜி. ராமநாதன். ஆங்காங்கே அவர் கொடுத்திருக்கும் துல்லியமான சங்கதிகளும், சின்னச் சின்ன பிருகாக்களும் பாடலுக்கு மேலும் அழகு சேர்க்கின்றன.

(இப்படிப்பட்ட நேர்த்தியையும் அழகையும்தான் பின்னாளில் தான் இசை அமைத்த சங்கராபரணம் படத்தில் எஸ்.பி. பாலசுப்ரமணியத்திடம் கே.வி. மகாதேவனும் புகழேந்தியும் வரவழைத்திருக்கின்றனர்.)

படம் என்னவோ படு தோல்விதான். ஆனால் "எஜமான் பெற்ற செல்வம்" பாடல் மட்டும் கே.வி. மகாதேவன், ஜி. ராமநாதன் ஆகிய இருவரின் திறமைக்கும் அசைக்க முடியாத சாட்சியாக இன்றளவும் நிலைத்து நின்று விட்டிருக்கிறது.

ஆர்.எம். கிருஷ்ணசாமி - ஒளிப்பதிவாளர், திரைக்கதை அமைப்பாளர், தயாரிப்பாளர், இயக்குனர், ஸ்டூடியோவுக்கு சொந்தக்காரர் - இப்படிப் பலமுகம் கொண்ட ஒரு திறமைசாலி. ஆர்.எஸ். மனோகர் அறிமுகமான "ராஜாம்பாள்" இவரது சொந்தத் தயாரிப்புதான்.

மாபெரும் வெற்றி பெற்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் "தூக்கு தூக்கி" இவரது தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் உருவான படம்தான்.

இவர் தயாரித்து இயக்கிய படம் தான் "அபலை அஞ்சுகம்". டி.ஆர். மகாலிங்கம் இரட்டை வேடத்திலும் அவருடன் சௌகார் ஜானகி, எம். என். ராஜம் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்த படம்.

கே.வி. மகாதேவனின் இசையில் பாடல்களை கவியரசு கண்ணதாசன், மருதகாசி, தஞ்சை ராமையாதாஸ், உடுமலை நாராயணகவி, சுரதா ஆகியோர் எழுதி இருந்தனர்.

படத்தின் பிரதியும், பாடல்களும் வழக்கொழிந்துபோய் விட்டாலும், டி.ஆர். மகாலிங்கம் - பி. சுசீலா இணைந்து பாடிய "வெண்ணிலா குடைபிடிக்க" என்ற உடுமலை நாராயண கவியின் பாடல் இனிமையாக நம் காதுகளை வருடுகிறது.

"பாஞ்சாலி" - (முக்தா) வி. சீனிவாசன் "முதலாளி" படத்துக்குப் பிறகு இயக்கிய படம். ஆர்.எஸ். மனோகர் கதாநாயகனாக நடித்த படம். இந்தப் படத்தில் அவர் பாடுவதாக அமைந்த பாடல் "ஒருமுறை பார்த்தாலே போதும் - உன் உருவம் மனதை விட்டு நீங்காது எப்போதும்"

மனோகருக்கு ஏ.எல். ராகவனைப் பாடவைத்து இந்த அருமையான பாடலை கே.வி. மகாதேவன் கொடுத்திருக்கிறார்.

"மாமா"வின் இசையில் ராகவன் எத்தனயோ பாடல்களைப் பாடியிருக்கிறார். என்றாலும் இந்தப் பாடல் அவரது முழுத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஏ.எல். ராகவனின் "மாஸ்டர்பீஸ்" பாடல் என்று கூட இதைச் சொல்லலாம். பலமுறை கேட்கத் தூண்டும் பாடல் இது.

இதே போல "நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு" என்ற பாரதியின் பாடலும் இதில் குறிப்பிடப்படவேண்டிய பாடல். ஏ.எல். ராகவன் - ஆண்டாள் ஆகிய இருவரும் பாடி இருக்கும் மிகவும் இனிமையான பாடல். அந்த நாளில் இலங்கை வானொலியின் உபயத்தால் அடிக்கடி கேட்டு ரசித்த பாடல். இப்போது அறவே புழக்கத்தில் இல்லாமல் போய்விட்டது காலத்தின் கொடுமைதான்.


காதுகளுக்கு ரம்மியமான இசையில் பாடல்கள் என்றால் அதில் கே.வி. மகாதேவனை மிஞ்ச யாராலும் முடியாது என்று உறுதியாகச் சொல்லும் வகையில் "பொன்னித் திருநாள்" பாடல்கள் அமைந்தன.

"ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து - உன் எழில்தனைப் பாடவா தமிழைச் சேர்த்து" - பாடல் வரிகளைக் கேட்டதுமே மனம் துள்ளிக் குதிக்கிறதல்லவா? பி.பி. ஸ்ரீனிவாஸின் குரலில் பதிவான இந்த அருமையான பாடலில் வெளிப்படும் இனிமையின் சிறப்பை எப்படிச் சொல்வது?

"வீசு தென்றலே வீசு வேட்கை தீரவே வீசு" - பி. சுசீலா - பி.பி. ஸ்ரீநிவாஸ் குரலில் மற்றொரு அருமையான பாடல். சுசீலாவின் குரலில் உற்சாகமாக துவக்கத்திலேயே உச்சத்தைத்தொடும் பாடல்.

"கண்ணும் கண்ணும் கதைபேசி" - சுசீலா - ஸ்ரீனிவாஸ் இணைப்பில் ஒரு சோகப் பாடல். பாடலை மகாதேவன் அமைத்திருக்கும் விதமும் ஸ்ரீனிவாஸின் குரலில் ஆங்காங்கு தெறிக்கும் லேசான கமகங்களும், சுசீலாவின் குரலில் தொனிக்கும் லேசான விசும்பலுடன் கூடிய சோகமும் - பாடலை இன்றுவரை நிலைநிறுத்தி விடுகின்றன.

இப்படி 1959ஆம் ஆண்டு மகாதேவன் இசையில் வெளிவந்த பாடல்கள் எல்லாம் அவரது பயணத்தை தங்க நாற்கரச் சாலைப் பயணமாக்கிக் கொண்டிருந்தன.


ஏ.எல்.ராகவன்

(தொடரும்)

# "கத்தி"ச் சண்டை எதற்காக?

- ஞாநி -









லைக்கா பிரச்சினை மிக எளிமையானது. எதிரியை விட துரோகியையே அதிகம் எதிர்க்க வேண்டும் என்ற கோட்பாட்டிலானது. லைக்கா, யுத்தம் முடியும் வரை விடுதலைப்புலிகளின் அமைப் பாக இருந்துவந்தது. காற்று திசை மாறுவதற்கேற்ப கட்சி மாறியவற்றில் அதுவும் ஒன்று.

இந்தத் துரோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத முன்னாள் கூட்டாளிகள் இப்போது கடுமையாக அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான். மற்றபடி ராஜபக்ச அரசுடன் உறவு வைத்திருப்போரையெல் லாம் எதிர்ப்பது என்பது பாவனைதான்.

அப்படி எதிர்ப்பதானால், முதலில் மோடி, மோடி யின் அமைச்சர்கள் யாருமே தமிழ்நாட்டுக்குள் நுழையக் கூடாது என்று கறுப்புக் கொடி காட்டியிருக்க வேண்டும்.

தினசரி, சென்னையிலிருந்தும் திருச்சியிலிருந்தும் கொழும்புக்குச் செல்லும் விமானங்களில் இலங்கையுடன் வணிக உறவு வைத்திருக்கும் தமிழர்களே அதிகம் போய் வருகிறார்கள். அந்த விமான சேவைகள் தடுக்கப்படவில்லை.

ஐரோப்பாவில் புலிகளின் பழைய, இன்றைய ஆதரவு சக்திகளுக்குள்ளே நடக்கும் போராட்டத்தின் வெளிப்பாடுதான் லைக்கா பிரச்சினை. எப்போதும் சினிமாக்காரர்களும் சினிமா தியேட்டரும்தான் எதிர்க்க எளிமையான எதிரிகள்.

லைக்காவை எதிர்த்து தியேட்டரில் பெட்ரோல் குண்டு வீசிக்கொண்டிருந்த அதே நாளில் டெல்லி யில் தன் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு வந்தி ருக்கும் கோத்தாபய ராஜபக்சவுடன் அருண் ஜேட்லி இராணுவ ஒத்துழைப்பு பற்றி விவாதம் நடத்தினார். விவரங்களை நிருபர்களிடம் வெளியிட மறுத்துவிட்டார்.

அடுத்த முறை அருண் ஜேட்லியோ மோடியோ தமிழ்நாட்டுக்கு வரக் கூடாது என்று தடுக்க முடியுமா? மீனம்பாக்கத்திலிருந்தும் திருச்சியிலிருந்தும் தினசரி கொழும்புக்குச் சென்று வரும் விமானத்தைப் பறக்க விடாமல் தடுக்க முடியுமா?

இலங்கைத் தமிழர்களின் அசல் பிரச்சினைகளைத் தீர்க்க சரியான வழிகளைத் தேட இயலாமல், நிழல்களைப் பூதங்களாகக் காட்டிப் போராடும் அபத்தம்தான் நடந்துகொண்டிருக்கிறது.

(நன்றி: தி இந்து)

# "தமிங்கிலம்"

- இடைக்காடு இளைய பண்டிதன்

அச்சேறும் வேகத்தில் திமிங்கிலம் என்பதன் தலை விசிறிதான் கழன்று தவறி இந்தத் தமிங்கிலத் தலைப் பானதோ எனக் கருத வேண்டாம். இந்தத் தமிங்கிலமும் ஒரு திமிங் கிலமே எமது தமிழ் மொழியின் உயிரோட்டத்தினை முழுதாய் விழுங்கவல்ல திமிங்கிலம்!

"பேருந்து செலுத்துவதற்கு "சர்வீஸ்" உள்ள "டிரைவர்" தேவை."

தமிழகப் பிரபல நாளேடான தினத்தந்தியில் அந்தக் காலத்தில் வெளிவந்திருந்த ஒரு விளம்பரமிது. திராவிட இயக்க முன்னோடிகளிலொருவரும், தனித்தமிழ்ப் பிரசாரகரென அடையாளப்படுத்தப்பட்டவருமான அமரர் சி.பா.ஆதித்தனார் அவர்கள் நிறுவிய இப் பத்திரிகை, பல நகரப்பதிப்புகளுடன் இலட்சக்கணக்கில் வாசக பலத்தைக் கொண்டதாக தொடர்ந்தும் முதலிடத்தை தக்க வைத்திருக்கின்ற ஓர் அச்சூடகம்.


அன்று - தமது தனித் தமிழ்ப் பயணத்திற்கு "பேருந்தை" மட்டும் தயார்ப்படுத்திவிட்டு "சர்வீஸ்" உள்ள "டிரைவர்" தேவைக்காக அது விளம்பரப்படுத்தியிருந்த அதே காலகட்டத்தில், எமது நாட்டின் "பஸ்"களை "அனுபவ"முள்ள "சாரதி"கள் செலுத்த, அவற்றில் தராதரமுள்ள நடத்துநர்கள் "பயணச் சீட்டு" வழங்கும் பணியிலிருந்தனர். இன்றும், அங்குள்ள பேருந்தில் அதனைச் செலுத்தும் "டிரைவருடன்" "கண்டக்டர்" பயணிகளுக்கு "டிக்கட்" கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

பானை சோற்றுப் பூதமாக குறித்த இந்த மொழியாக்கற் பாய்ச்சலைப் பொறுத்தளவில் செய்திகளை முந்தித் தருகின்ற தினத்தந்தியும் எம்மிடம் பிந்தித்தான் விட்டது.

இந்தக் கலப்பு மொழிக்கலாசாரத் தைத் தான் தமிழ்நாட்டின் பெருவாரி யான ஊடகங்கள் சரளமயமாக்கி வருகின்றன.

எமது கோப்பி (coffee) பானமும், பிரதி அல்லது நகலும் (உழில) அங்கு "காப்பி" என்ற ஒன்றே! காலகதியில் இந்தக் "காப்பி" ஆறி, "காபி" ஆயிற்று.

செம்மொழிகாத்த முத்தமிழ் முது வித்தகராம் கலைஞர் கருணாநிதியின் சொந்தத் தொலைக்காட்சியில் கூட தமிங்கிலத்தின் ஆட்சி தடல் புடலாக நடக்கிறது. விதிவிலக்காக பா.ம.க. வினரின் மக்கள் தொ. கா மற்றும் பொதிகை தொ.கா இவற்றில் தான் நல்ல தமிழை நுகரும் வாய்ப்புக் கிடைக்கிறது.



ஆங்கிலம் பேசும்போது
அதில் தமிழ் கலந்துவிடக்கூடாது
என்பதில் கவனமாகயிருக்கும் நாம்.

தமிழ் பேசும்போது
அதே கவனத்தை
மனதுள் கொள்வதில்லை...!!!

புலிகளின் காலத்தில் எமது பிரதேசங்களிலுள்ள பல்வகை வணிக மையங்களின் பெயர்கள் தனித்தமிழ்ப்படுத்தலுக்கு நிர்ப்பந்திக் கப்பட்டன. தற்போது அவை சகசமான புழக்கத்தில் நிலைத்துவிட்டன. அவற் றுட் சில உண்மையாகவே நறுக்கான, நயமான கருத்துப் பொதிந்தனவாக அமைந்தும் இருக்கின்றன.

வெதுப்பகம், குளிர்கழி அகம், நகை யகம், சிகையகம், இரும்பகம்.... இந்த அகங்களின் வரிசையில் துரும்பகம் (தும்புப்பொருள் விற்பனையகம்) ஒட்டகம் (வாகனச் சக்கர ரியூப் - காற்றுக்குழாய் - ஒட்டுகிற இடம்) இவையிரண்டும் ஏனோ தப்பித்துக் கொண்டன.

விசேடமாக எமது கல்விப்புலத்தில் வழங்கப்படுகின்ற கலைச் சொல்லாக் கங்கள் தொடர் கற்பித்தலுக்கூடாக சம்பந்தப்பட்ட சகலரதும் பாவனைக்கு இலகுபடுத்தப்பட்டுள்ளன. கல்வியாளர் தகைமைகளைச் சுட்டுகின்ற பட்டங்கள் அர்த்தச் செறிவுடன் அருந்தமிழுக்கு அணிகலன்களாகியுள்ளன. கலைமாணி, நுண்கலைமாணி, விஞ்ஞானமாணி, வணிகமாணி... என்றெல்லாம் இவை விரிந்து செல்கின்றன.

இங்கு நாம் டொக்டர் எனும் சரி யான உச்சரிப்பில் மருத்துவரை - "வைத்திய கலாநிதி" என்கிறோம். கல்வி சார்ந்தும் சாராமலும் சிறப்புப் பெறுகின்ற ஏனைய டொக்டர்களை "கலாநிதி"கள் என்ற பொதுப்பெயரில் குறிப்பிடுகிறோம்.

தமிழ்நாட்டில் தி.மு.க. கலைஞரும் டாக்டர்; பா.ம.க. மருத்துவர் இராமதாஸும் டாக்டரே! அரிதாக ஒரு சிலர் தாம் "முனைவர்" ஆகியுள்ளனர்.

நவீன அறிவியல் யுகத்தில் புதிது புதிதாகப் பல்வகைப்பட்ட சாதனங்கள் உருவாகிக் கொண்டேயிருக்கும். அவை ஒவ்வொன்றிற்கும் குறியீட்டுப்பெயர் சூட்டப்படும். சர்வதேச மொழி எனும் வகையில் ஆங்கிலச்சொற்களே அதற்குப் பயனாகும். பொருத்தமான தமிழ்ப்பதங்கள் கிடைக்கும் வரையில் - அதே உச்சரிப்பைத் தமிழ்ப்படுத்தி, அருகருகே அடைப்புக்குறிகளுள் ஆங்கிலப்பத உருக்களை இட்டும், அடிக்குறிப்பில், விளக்கங்களைக் கொடுத்தும் நடைமுறைப்படுத்தலாம்.

இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான் காலப்போக்கில் துரிதமாகவே தமிழ்ப்பதங்கள் பழக்கப்படுத்தப்பட்டு விடும். இது இங்கு சாத்தியப்படும்; தமிழ் நாட்டில் இப்போதுதான் தமிழ்க்கலைச் சொற்களில் முனைந்து பார்க்கின்றார்கள்.

சமீபத்திய மகிழ்ச்சிகரமான நிகழ்வாக, இங்கு யாழ்தேவியின் வருகையைக் குறிப்பிட வேண்டும். இளைய தலைமுறைக்குப் புதிதாகவும், மற்றவர்க்கு மீளவும் அறிமுகமாகும் இந்த "ரயில்" அங்கு இப்போதும் "புகைவண்டி" அல்லது "புகையிரதம்" தான்! நிலக்கரி நீராவி உபயத்தில் இயங்கி, கரித்துகள்களால் கண்களைக் கசக்கவும், உடைகளைக் கசங்கவும் வைத்த அந்தப் புகைவண்டியானது போயொழிந்து பலகாலமாயிற்று. (Rail) தண்டவாளத்தில் பயணிக்கின்ற இந்த ரயிலை, Train எனும் ஆங்கிலப் பதத்திற்குரிய சரியான அர்த்தத்துடன் நாம் தொடருந்து - தொடர்வண்டி என இப்போது அழைக்கிறோம்.

அங்கு - பேருந்தில் ஆரம்பித்த தமிழாக்கற் பயணம், இங்கு - சிற்றூர்தி, பாரவூர்தி, உந்துருளி, உலங்கு வானூர்தி என்ற புதுநாமங்களுக்கும் வழிசமைத்துள்ளது. இவ்வாறாக பொருத்தமான வார்த்தைகள் அன்றாடப் புழக்கத்திற்கு உட்படுகையில் தமிங்கிலத்தின் வீரியம் தானாகவே குன்றிவிடும்.

இன்னொரு விடயம் நோக்கற்பாலது. வடமொழிக்கலப்பில் திரிபுச் சொற்களாகச் சில ஆங்காங்கே தமிழில் விரவியுள்ளன. இவற்றால் தமிழின் செழுமைக்குப் பெரியளவில் பங்கமேதும் ஏற்பட்டுள்ளதாகக் கூறமுடியாது. கொள்ளல் கொடுத்தல் முறையில் இவ்விரு பாரம்பரிய மொழிகளும் தனித்தனியாகத் தம்மை வளப்படுத்தி யிருக்கின்றன. மொழி வரலாற்றாளர் எவரும் இவ்விடயத்தில் குறைகாண வில்லை; அரசியற் சந்தர்ப்ப வாதிக ளைத் தவிர!

இனி - சுயமான ஆக்கங்களைச் சிந்தித்தே பார்க்காத உள்ளூர் தொலைக் காட்சிகள். சிலவற்றைப் பார்ப்போம். தமிழகத்தின் "சக்தி" வாய்ந்த தொலைக் காட்சிகளின் தொடர் அம்சங்கள் பலவற்றை மறுஒளிபரப்புச் செய்யும் இவை தமது நிகழ்ச்சி அறிவித்தல்களி லும், விளம்பரங்களிலும், கூட அங் குள்ள அதேபாணியில் தமிங்கிலச் சொல்லாடல்களையும், உடல் மொழி-களையும் பிரதிபலிக்கின்ற அசல் பிரதிகளும் இவையே!

"எமது இரசிகர்களுக்கு புரியக்கூடி யது இதுதான்" என்ற சுய எடுகோ ளுடனோ அல்லது "இரசனை மட்டத்தை இந்தளவில் வைத்திருப்பதே இலாபகரமானது" எனும் வணிகமயக் குறிக்கோளுடன் இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன? இவற்றால் தமிழ்க்கலாசாரத்தில் "வசந்தத்தை" எவ்வாறு ஏற்படுத்த இயலும்?

# பொய் கண்டுபிடிக்க...

என்ன நினைக்கிறார்கள் என்பதை சிலருடைய முகத்தைப் பார்த்து நீங்கள் ஒருபோதும் கண்டுபிடித்துவிட முடியாது. அந்த அளவுக்கு இறுக்கமாக இருப்பார்கள். அல்லது எந்த உணர்ச்சியும் காட்டாமல் எப்போதும் சிரித்த முகத்துடனேயே காட்சி தருவார்கள். அவர்கள் பொய் சொன்னாலும் யாருக்கும் தெரியாது.

பொய் சொன்னால் கண்டுபிடிக்கும் கருவி ஒன்று இப்போது ஜப்பானில் பிரபலம். முன் நெற்றியில் அணிந்து கொள்ளும் இந்தக் கருவியை அணிந்து கொண்டு இயக்கியதும், இக்கருவியில் இருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் மூலம், அது இயல்பான இதயத்துடிப்பு, நாடித்துடிப்பைக் கணக்கிட்டுவிடும்.

பின்னர் கேள்வி கேட்கும்போதோ, பேசிக் கொண்டிருக்கும்போதோ, உண்மையைச் சொன்னால் பச்சை விளக்கும், பொய் சொன்னால் சிவப்பு விளக்கும் எரியும். பொய் சொல்லியிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டால் செம்மஞ்சள் வண்ண விளக்கு எரியும். பொய் சொல்லும்போது எகிறும் இதய, நாடித் துடிப்புகளைக் கணக்கிட்டுத்தான் இந்த விளக்குகள் எரிகின்றன. நான் எதற்கும் கலங்காமல், பதறாமல் பொய் சொல்வேன் என்று சொல்பவரா நீங்கள்? அப்படியானால் எத்தனை கருவிகளை வேண்டுமானாலும் நீங்கள் அணிந்து கொள்ளலாம்.





ஆசிரியர் குழாம்

# பாட இணைபாட விதான செயற்பாடுகள் உட்பட பல்துறைசார் விருத்திகண்டு பல கோணங்களில் மிளிரும் கோண்டாவில் இந்துக் கல்லூரி



(அதிபர்)

## க.தவகீஸ்வரன்

கோண்டாவில் (Kondavil) இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வலிகாமம் பிரிவில் உள்ள ஒரு ஊர். யாழ்ப்பாண நகரில் இருந்து ஏறத்தாழ 3.5 மைல்கள் தொலைவில் அமைந்துள்ள இந்த ஊரை ஊடறுத்து யாழ்ப்பாண நகரில் இருந்து வடக்கு நோக்கி காங்கேசன்துறை வீதியும், பலாலி வீதியும் செல்கின்றன. இவ்வூருக்கு தெற்கு எல்லையில் கொக்குவில், திருநெல்வேலி ஆகிய ஊர்களும், வடக்கில் இணுவில், உரும்பிராய் என்னும் ஊர்களும் உள்ளன. கிழக்குத் திசையில் இருபாலை அமைந்துள்ளது.இவ்வூரில் உள்ள ஓர் பிரபல்யமான பாடசாலையே கோண்டாவில் இந்துக் கல்லூரி. 1878 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பல்துறைசார் விருத்தி கண்டு வருகின்றது.




(உப அதிபர்)


## இ.அருணகிரிவாசன்

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு–2014

### தோற்றியோர் எண்ணிக்கை - 27




### க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறு–2013





### விளையாட்டுத் துறை சாதனைகள்

- செல்வன். க.டிலக்சன்(15 வயதின் கீழ் ஆண்)

| | உயரம் பாய்தல் | நீளம் பாய்தல் | 100m |
|---|---|---|---|
| கோட்டம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| வலயம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| மாவட்டம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| மாகாணம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| தேசியம் | 4ஆம் இடம் | 7ஆம் இடம் | - |

### க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறு–2013




**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2014 இல் 100 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள்**

*ர.அபிகா-154*
*ப.சஞ்சிகா-145*
*சு.ஆகாஷ்-140*
*ஜெ.மிதுஜா-139*
*சி.கஸ்தூரி-135*
*ந.சுஜீபன்-135*
*ச.அஸ்விினி-135*
*சு.கிருஷ்ணரதன்-135*
*க.பிருந்தன்-132*
*வி.சுகந்தன்-131*
*உ.தர்மிகன்-131*
*சி.ரஜிகரன்-128*
*ச.சுலக்ஷனா-122*
*ச.அபிஷா-117*
*லூ.பிரவீனா-116*
*இ.வைஸ்ணவி-1.2*
*ரூ.சௌமிகன்-111*
*ப.யாதவன்-103*
*ரூ.மியூசிகன்-103*




### மாகாண மட்ட சாதனைகள்



செல்வி சா. ஆஷிக்கா விசேட கல்வி பிரிவு மாணவருக்கான தனி நடனத்தில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம்

### தமிழ்த் தினப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்

| மாணவர்கள் பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|
| ர.அஜானி | 2 | பேச்சு | 3ஆம் இடம் | |
| தே.டயானி | 4 | பாவோதல் | 3ஆம் இடம் | |
| உ.ரசிந்தா | 5 | பாவோதல் | 3ஆம் இடம் | |
| ச.டிலக்சனா | 2 | தனி நடனம் | 2ஆம் இடம் | |
| நி.டிலக்சனா | 3 | தனி இசை | 3ஆம் இடம் | |
| குழு(திறந்தா போட்டி) | | நாட்டார் பாடல் | 2ஆம் இடம் | |
| குழு(திறந்த போட்டி) | | மேடை நாடகம் | 2ஆம் இடம் | |
| இ.கேதீஸ்வரன் | | சித்திரப்போட்டி | 2ஆம் இடம் | 2ஆம் இடம் |

# வேகக் கட்டுப்பாடு இன்மையால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

ஏ-9வீதிக்கு சமாந்தரமாக ஏ-9 வீதியை அண்மித்துச் புகையிரத கடவைகளூடாக பிரதான வீதிக்கு வரும் வாகனங்கள் சடுதியாகவேகத்துடன் வருவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ள தாக பயணிகள் மத்தியில் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

புகையிரத கடவையூடாக பிரதான வீதிக்கு வரும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் வேகத்தை கட்டுப்படுத்தாது சடுதியாக வீதிக்கு வருவதால் பிரதான வீதியால் செல்லும் பயணிகள் விபத்துக்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக புகையிரத பாதையை ஊட றுக்கும் வீதிகளூடாக செல்வோர் பொது வாக வேகத்தை கட்டுப்படுத்தி நிதானத்துடன் செல்வதன் மூலம் விபத்தை தடுக்கலாம் எனவும் பயணிகள் தெரிவிப்பதோடு புகையிரதப் பாதையை ஊட றுக்கும் வீதிகளில் மண் தடைகளை சிறுஅளவில் ஏற்படுத்தி வாகனங்களின் வேகத்தை குறைப்பதற்கு ஏற்ற வகையில் குறியீடுகளும் இடப்படவேண்டும் எனவும் இச் செயற்பாடுகள் மூலமும் விபத்துக்களைத் தடுக்க முடியும் என தெரிவிக்கும் பொது மக்கள் இது தொடர்பில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

(66)

## அனைவருக்கும் நீர் விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொறியியலாளர் நிறுவனம் வடபிராந்தியம், யாழ். முகாமையாளர் சம்மேளனம் (JMF) யாழ். விஞ்ஞான சங்கம் ஆகியன ஒன்றிணைந்து "அனைவருக்கும் நீர் 2015-20130" என்ற ஐக்கிய நாடுகளின் நிலைத்தகு அபிவிருத்தி இலக்கும் நீர்வளத்திறன் அபிவிருத்திக்கான தேசிய மூலோபாயத்தின் தேவையும் பற்றிய கருத்தரங்கு ஒன்றினை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.

இக்கருத்தரங்கு எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குடிசார் பொறியியல் பிரிவு யாழ். பல்கலைக்கழகம் அறிவியல் நகர், கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கின் வளவாளராக பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பொறியியல் பிரிவு விவசாய பீட சிரேஷ்ட பேராசிரியர் நிமல் குணவர்த்தன கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்.

இக்கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# வவுனியாவில் இளைஞர் குழு தாக்கு; மூன்று பேர் காயம்; ஒருவர் கைது


(வவுனியா)

வவுனியா, புதுக்குளம் பகுதியில் வீடு ஒன்றில் புகுந்த இளைஞர் குழு, அங்கு நின்றவர்கள் மீது தாக்கியதில் மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, புதுக்குளம், பிள்ளையார் கோவிலடியில் உள்ள ஒரு வீட்டின் உள்ளே நுழைந்த ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழு அவ்வீட்டின் யன்னல், கதவு, வீட்டில் நின்ற மோட்டார் சைக்கிள் என்பவற்றை அடித்து சேதப்படுத்தியதுடன், அந்த வீட்டில் நின்றவர்கள் மீதும் தாக்கியுள்ளனர்.

இதன் போது ஏற்பட்ட கைகலப்பில் வீட்டில் இருந்த இருவரும் தாக்குதலுக்குச் சென்ற இளைஞர் ஒருவருமாக மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பாக மாறியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

## வெள்ளி நற்சிந்தனை...



# இவன் ஒரு முட்டாள்

அந்த அரசனின் வேலையாள் இருக்கிறானே, அவன் ஒரு விந்தையான பேர்வழி. அரசன் அவனிடம் அந்த வேலை சொன்னாலும் அவன் உடனே அந்த வேலையை எதிர்ப்பு ஏதும் சொல்லாமல் செய்வதேயில்லை. ஏதாவது அநாவசிய சந்தேகங்களை எழுப்பி அரசனைக் குழப்புவது அவன் வழக்கம்.

உதாரணமாக வெளியூரிலிருக்கும் ஒரு மனிதனிடம் ஏதாவது வேலையாகப் போய் வரச் சொன்னால் போதும். உடனே அந்த வேலையாள் "அவர் அங்கு இல்லாவிட்டால் என்ன செய்வது? எத்தனை நாள் தங்குவது? போன்ற சந்தேகங்களை எழுப்புவான். அரசன் குழம்பத் தொடங்குவான். இதனால் இந்த அரசனுக்கு இந்த வேலையாள் மீது அடிக்கடி கோபம் உண்டாகும். அவனை வேலையை விட்டு நீக்கி விடலாமா? என்று எரிச்சல் உண்டாகும். ஆனால் அவனுடைய நேர்மையான குணம். உண்மையான உழைப்பு ஞாபகத்திற்கு வந்ததும் அரசன் கோபத்தை அடக்கிக் கொள்வான்.

அரசனுக்கு அவனை எப்படியாவது திருத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவன யோசனை செய்து அந்த வேலையாளின் கழுத்தில் "இவன் ஒரு முட்டாள்" என்ற அட்டையைத் தொங்க விடும்படி உத்தரவிட்டான். அட்டை கழுத்தில் தொங்கியபடி காலம் சென்றது.

அரசனுக்கு வயதும் கூடியது நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகி இனிப் பிழைக்க மாட்டோம். என்ற நிலையை அடைந்து விட்டான் வைத்தியமும் பலனளிக்கவில்லை அமைச்சர்கள், தளபதிகள் ஆகியோர் ஒவ்வொருவராக வந்து பார்த்து அரசனுக்கு ஆறுதல் சொல்லி விட்டுச் சென்றனர்.

வேலையாளும் அரசனைப் பார்க்க வந்தான். அரசன் அவனிடம் "நான் இனிப் பிழைக்க மாட்டேன். சாகப் போகிறேன்" என்று வருந்தத்துடன் கூறினான்.

வேலையாள் :- சாதல் என்றால் என்ன?

அரசன் :- தெரியாது.

வேலையாள்:- தேரில் போகலாம் அல்லவா?

அரசன் :- தேர் போகாது.

வேலையாள் :- குதிரை மேல்?

அரசன் :- குதிரையும் போகாது: எதுவும் போகாது.

"அரசே தாங்கள் ஊருக்குப் போவதாகச் சொல்கிறீர்கள் எந்த வழி, எவ்வளவு தூரம், எந்த ஊர் என்பதும் தெரியவில்லை என்கிறீர்கள், குதிரை போன்ற வாகனங்களும் செல்லாது என்கிறீர்கள். ஆனால் அந்த ஊருக்குப் போவது மட்டும் நிச்சயம் என்கிறீர்கள். ஊர் தெரியும், வழி தெரியாது என்கிற நீங்கள் தான் இந்த அட்டைக்கு மிகவும் பொருத்தமானவர்" என்று கழற்றி அரசன் கழுத்தில் மாட்டி விட்டுச் சென்றான் அந்த வேலையாள்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

சங்கப்புலவன் இன்று யாரேனும் உயிரோடு வந்தால் இன்றைய நவீன தமிழ்க் கவிதைகள் எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்று கேட்பான். இன்றைய மொழி தனக்குள் பல் வேறு கலைச்சொற்களை சேகரித்துக்கொண்டு விட்டது. அது சூழலின் பன்முகப் பார்வைக்காக தனது மொழிச் சம்பிரதாயங்களை உடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் அவை இயந்திரங்களுக்குள் அடைக்கலமாகி உலோகச் சொல்லொலிகளாகப் பயணப்படவும் காத்திருக்கிறது நவீன மனித அவசரங்களில் கவிதைக்கான மனங்கொள்ளுதலே ஒரு சிறிய வட்டமாக குறுகிப் போனபின், இன்றைய கவிதை, உலக மனிதனுக்காக என்ற திசையில், தன் இருப்பின் பூகோள பிம்மானங்களையும் தாண்டி, சில சூக்குமமான வெளிகளில் சஞ்சரிக்கிறது. – யவனிகா ஸ்ரீராம்

கவிதை மனதின் மூலையில் ஒரு வார்த்தையாகப் பிறக்கிறது. கவிஞன் செய்ய வேண்டியதெல்லாம் அந்த வார்த்தையின் முன்னும் பின்னும் ஒளிந்துள்ள மற்ற வரிகளைக் கண்டு பிடித்து எழுதுவதுதான். இச்செயல்பாட்டில் நாம் ஒன்றைப் புதிதாக உருவாக்குவதற்குப் பதிலாக ஏற்கனவே அறிந்து மறந்துபோன ஒன்றை மீண்டும் ஞாபகம் கொள்ளச் செய்வதையே கவிதையின் உருவாக்கமாகச் சொல்லலாம். – ஜோர்ஜ் லூயி போர்ஹே

ஒரு நல்ல கவிதை, எதை அது சொல்லிற்றோ அது ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டது என்ற வருத்தத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. எதை அது சொல்ல விரும்புகிறதோ அதைச் சொல்ல முடியாமல் இருப்பதும் அதற்குத் தெரியும். உண்மையான மேலான கவிதை ஒன்றை, யாரோ ஒருவன், எங்கோ ஒரு தில் புனைந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் அது வாழ்ந்து கொண்டிருக்கிறது. – சீதாகாந்த் மகாபத்ர

கவிதையைப் பொறுத்தவரையில் வாழ்க்கை பின்னணி, இடம், நிகழ்வுகள், மனிதர்கள் தொடர்பான தகவல்கள். கவிதையில் மனத்தின் இயக்கத்தை வாசகன் உள்வாங்கிக் கொள்வதற்காக ஓர் அவகாசத்தையும் பொது வழியையும் அளிக்கும் அளவே அத்தியாவசியமானது. அதற்கு மேல் கவிதையை உருவாக்குவது அனுபவங்களோ கதையோ அல்ல. அவற்றில் இருந்து பிறக்கும் மொழியின் நடனம்தான். ஆனால் நடனத்தை முயற்சிப்பதைவிடத் திண்ணையில் அமர்ந்து கதை சொல்வது சுலபமாக இருப்பதால் பல கவிஞர்கள் கவிதைக் கதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். – மனுஷ்ய புத்திரன்

கவிதையில் அர்த்தம் உருவாவது வார்த்தைகளின் தனித்த பொருளைக் கூட்டி திரட்டுவதால் அல்ல. மாறாக சொற்களின் ஒலிப்பு, பிற சொற்களுடன் கொள்ளும் இணைவு மற்றும் எதிர்மை உறவுகள், வாக்கிய அமைப்பில் நிறுத்தல் மற்றும் அழுத்தத்தினால் ஏற்படும் மௌனம், இடைவெளி, தொனி, மயக்கம் ஆகியவற்றினாலேயே கவிதையின் அர்த்தப்பரப்பு தோற்றம் பெறுகிறது. தொடர்புறுத்தலின் பொருட்டு பேச்சு மற்றும் உரைநடையில் வாக்கியங்கள் குறிப்பிட்ட தர்க்க ஒழுங்கிற்கு உட்பட்டதாகவே அமைக்கப்படுகின்றன. ஆனால் கவிதையின் கவித்துவம் இத்தகைய தர்க்க ஒழுங்குகளை மீறுவதனாலேயே தோன்றுகிறது. – க. மோகனரங்கன்

கவி என்கிற பகுதியைக் கவனிக்கும் பொழுது சங்கீதத்துடன் இணைந்தது என்பது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். சங்கீதத்திற்கு ஒரு வடிவத்தை அர்த்தத்தைக் கொடுப்பது பாட்டு. பாட்டும், சுருதியும் கலந்த கூட்டுறவுதான் பண். பாட்டின் ஜீவநாடி, உணர்ச்சி, அழகு, வாய்மை. அதுதான் கவி. – புதுமைப்பித்தன்

வாழ்க்கையைப் பற்றி இளம் கவிஞனின் 'எந்தையும் தாயும்' சொல்லிக் கொண்டிருந்த விஷயங்களைச் சொல்வதற்கான தேவைதான் அவனுக்கும் இருக்கும் என்றால் அவன் கவிதைத் துறைக்கு வராமல் இருப்பது நல்லது. அவனுக்கு எவ்வளவு சாமர்த்தியங்கள் இருந்தாலும் அவன் நேற்றைய விஷயத்தை வைத்து இன்றைய கவிதையை உருவாக்க முடியாது. இன்றைய வாழ்க்கையின் சிக்கலை அவனுக்குப் பார்க்கத் தெரியவில்லை என்றால், இன்றைய வாழ்க்கைக்கும் அவனுக்குமான முரண்பாடுகள் எதுவும் இல்லை என்றால், அவனுக்கு நெருக்கடியோ விசனமோ இல்லை என்றால் அவன் நிம்மதியாக இருக்க வேண்டிய பாக்கியசாலி. கவிதையை அவன் மறந்து விடலாம். – சுந்தர ராமசாமி

# தூர இட சேவைக்கு பழைய பேருந்துகள்

## மன்னாரில் பயணிகள் பெரும் அவதி

(மன்னார்)

இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலைக்கு புதிய 12 பேருந்துகள வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தற்பொழுது சேவையில் பயன்படுத்த முடியாத மிகவும் பழமை வாய்ந்த பேருந்துகளை தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்துவதாகவும் இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் நேர தாமதங்களுக்கும் முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


குறிப்பாக வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு கூடுதலாக பழைமை வாய்ந்த பேருந்துகளே சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும்,பல இடங்களில் தடங்கல் ஏற்பட்ட நிலையிலே நேர தாமதத்தின் மத்தியிலே தாம் செல்வதாகவும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி பயணிகளுடன் சென்ற அரச பேருந்து மன்னார் அரச பேருந்து தரிப்பிட நுழை வாயிலில் பழுதடைந்து நின்று விட்டது.

பின் பழுது சரி பார்த்த சுமார் 1 மணித்தியால தாமதத்தின் பின்பே பேருந்து பயணத்தை மேற்கொண்டது.

இதனால் மன்னார் அரச பேரூந்து தரிப்பிட பகுதியில் நீண்ட நேரம் வீதி நெரிசல் ஏற்பட்டிருந்தது. எனவே மன்னார் சாலைக்கு வழங்கப்பட்டுள்ள புதிய பேரூந்துகளை தூர சேவையில் ஈடுபடுத்த பயன்படுத்துமாறும் ஏனைய பேருந்துகளை உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தி மக்களுக்கு தாமதமற்ற சேவையை மேற்கொள்ள இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலை நிர்வாகம் முன்வர வேண்டும் எனவும் பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர

# இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானில் புலமைப் பரிசில்



(கொழும்பு)

இவ்வாண்டிற்கான உயர் கல்விக்கான உதவித் தொகை திட்டத்தின் கீழ் இலங்கையைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தினால் பொறியியல் துறை புலமைப்பரிசில் நிதியுத்வி வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவர் எச்.இ.மேஜர் ஜெனரல் ஹாசிம் குரேசி தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவர்களையும் உயர் ஸ்தானிகராலாயத்தில் சந்தித்து வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளதோடு பாகிஸ்தானில் அவர்களது உயர் கல்வியை தொடர வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மேலதிகமாக இலங்கையின் சாதாரண தர உயர்தர மாணவர்களுக்கென வருடாவருடம் பாகிஸ்தான் அரசாங்கத்தினால் ஜின்னா கல்வி புலமைப்பரிசில் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பொறியியல் துறை புலமைப் பரிசிலுடன் மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் மருந்துக் கல்வி தொடர்பாகவும் வருடாவருடம் புலமைப்பரிசில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன

## இலாபத்தில் ரெலிகொம்

Sri Lanka Telecom

இவ்வருடத்தின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் இலங்கை ரெலிகொம் 132 பில்லியன் ரூபாவை இலாபமாக சம்பாதித்துள்ளது.


இதேவேளை கடந்த வருடம் ரெலிகொம் 36.35 பில்லியன் ரூபாவையும், 2012 ஆம் ஆண்டு 324.6 பில்லியன் ரூபாவையும் இலபமாக பெற்றுள்ளது.

## கட்டுநாயக்காவில் இந்திய பயணி உயிரிழப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 51 வயதுடைய இந்தியர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

சவுதி அரேபிய தமாம் விமான நிலையத்திலிருந்து ஸ்ரீ லங்கா விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் வந்த இந்தியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திடீர் சுகயீனம் காரணமாக விமான நிலையத்தினுள் இவர் வீழுந்து கிடந்த போது, வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் உறவினர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்ததன் பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# பரமர் சங்கமம்

'பட்டிக்காட்டான் முட்டாசுக் கடையைப் பாத்தேமாதிரி' உவமேய உவமானத்தோடை சிலர் கதைப்பினம் எங்கடை மகிந்தர் 'எப்புடி இருக்கு பட்டிக்காட்டான்ரை பஜெஜட்' எண்டது நல்லாத் தான் இருக்கு.

இந்த முறை மூண்டாந் தடவையும் ஜனாதிபதி தேர்தலில் அவர் குதிக்கப்போறதுதான் இண்டைக்குப் பெரிய புதினமாப் பேசப்படுகுது. அதுக்கு மக்களை முட்டாளாக்கும் வரவு,செலவுத்திட்டமே இதெண்டும் எதிர்க்கட்சி கூறுகிறது. வேறு சிலர் மகிந்த அரச கட்டிலை விட்டிறங்க பெரும் அன்னவாரப் படுகிறாரெண்டும் சொல்லீனம்.

பரமருக்கெண்டா இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சிகை அலங்கரிப்பாளருக்கு புதிதாச் சலுகை காட்சி இருப்பது என்னவோ யுகப்புரட்சியாகவே எண்ணத் தோன்றுது. ஏனெண் டால் மகிந்தருக்கு சிகை அலங்காரம் செய்யும் தொழிலாளி இம்முறை கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு கேட்டிருப்பான்.

எல்லாத் தொழில்களுக்கும் அந்தச் சலுகை இந்தச் சலுகை எண்டு செய்யுறியள் ஏன் தூரப் போவான் உந்த ஊடகவியலாளராகப் பணி செய்யும் தொழிலாளிகளுக்கு லட்சக்கணக்கில் வாகனம் வாங்கவும் உதவினீங்கள் எங்களை இன்னமும் உங்கடை கண்ணிலை படேல்லையோ எண்டும் கேட்டிருக்கலாம்.

இதைச்சொல்லேக்கை எனக்குப் பழைய கதையொண்டு ஞாபகத்துக்கு வருகுது.செட்டியார் ஒருவருக்குச் சிகை அலங்கரிப்புத் தொழிலாளி வேலை செய்து கொண்டிருந்தார். சவரக் கத்தி தொண்டைக்குழியில் வரேக்க செட்டியார் சொன்னார் இஞ்சை கணேசு உன்ரை மோழின்ரை சாமத்தியத்தை செய்ய யோசிக் காதை. அதுக்கு நான் காசு தந்துதவுறன் எண்டு.

வேலை முடிஞ்சாப் பிற அந்தக் கதையே இல்லாமல் செட்டியார் எழும்பி நடந்திட்டேண்டு அந்தக் கதை வாய்மொழியாக அந்தக் காலங்களில் உலாவந்தது. அப்புடி மகிந்தரும் இந்த முறை கடைசியாக அமைந்தாலும் தன்ரை சிகை அலங்கரிப்பாளரின் பலநாள் கோரிக்கையை இந்துப் பஜெஜெட்டில் நிறைவேற்றியுள்ளதாகவே படுகிறது.


அதுமட்டுமா அரச ஊழியர்களுக்குப் பதினையாயிரும் ரூபாவும், தனியார் ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபாவும் அடிப்படைச் சம்பளமாக உயர்வாக்கியுள்ளமை மகிந்தரின் பெரிய பாச்சலெண்டடே வர்ணிக்கலாம்.

போகப் போகத் தான் தெரியும் நள்ளிரவு விலை உயர்வுப் பட்டியல்களின் பாச்சல்கள் பற்றி. அந்த நாளேல பிச்சைச் சம்பளமெண்டு சொன்ன முதியோருக்கான கொடுப்பனவும் மாதாந்தம் ஆயிரம் ரூபாவில் இருந்து இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கு.

யுத்தம் முடிஞச் புறகும் அதிகரிக்கப்பட்டு வந்த பாதுகாப்புச் செலவு இந்த பஜெஜட்டில் குறைக்கப்பட்டிருப்பதும் இன்னொரு முன்னுதாரணமாகக் கருதலாம். பட்டிக்காட்டானான மஹிந்தரின் 2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையை எதிர்க்கட்சிகள் பார்க்கிற பார்வை பட்டிக்காட்டான் முட்டாசுக் கடையைப் பாத்த மாதிரி இருக்கெல்லே என்ன நான் சொல்லுறே...

# குளியலறையில் யூஸ் உற்பத்தி

## யாழ். நகரில் கண்டுபிடிப்பு



யாழ். நகர்ப் பகுதியில் மிகவும் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கி வந்த யூஸ் உற்பத்தி நிலையம் யாழ். நீதிமன்றினால் சீல் வைத்து மூடப்பட்டது.

அண்மையில் இந்த உற்பத்தி நிலையத்தைச் சுற்றிவளைத்த சுகாதாரத் திணைக்களத்தின் விசேட குழுவினர், இங்கு மிகவும் சுகாதாரச் சீர்கேடான முறையில் யூஸ் உற்பத்தி நடைபெறுவதைக் கண்டுபிடித்தனர்.

சிறிய வீடு ஒன்றில் தொலைத தொடர்பு நிலையம், புகைப்பட நிலையம் என்பவற்றுடன் குளியலறையில் யூஸ் உற்பத்தியும் நடைபெறுவது கண்டுபிடிக கப்பட்டது. இங்கு அசுத்தமான நீரில் மருத்துவச் சான்றிதழ் எதுவும் பெறப்படாமல் உற்பத்தி நடைபெற்று வந்துள்ளது. இந்த நடவடிக்கையின் போது மனிதப் பாவனைக்கு உதவாத பெருமளவிலான யூஸ் பக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட யூஸ் உற்பத்திக்குப் பாவிக்கப்படும் வாசனைத் திரவியம் கிருமி நாசினிப் போத்தலில் சேமிக்கப் பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப் பட்டது.

இவ்வாறான உற்பத்திப் பொருள்களால் பெரும்பாலும் சிறுவர்களே பாதிப்படைகின்றனர் எனவும் இவ்வாறான தொடர் நடவடிக்கைகளை விரைவாக நடத்தும் படியும் வழக்கை விசாரித்த நீதிபதி தெரிவித்தார்.

## பளையில் விபத்து இருவர் காயம்

(பளை)

பளைப் பகுதியில் - ஏ9 வீதியில் நேற்று நண்பகல் இடம் பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

பளை வைத்தியசாலைக்கு அருகில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் லொறியும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் லொறிச் சாரதியும் அதில் பயணம் செய்த இருவரும் காயமடைந்தனர். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர்களான இரத்தினசிங்கம் கருணாகரன் (வயது 40), கதிரவேலு அபிசன் (வயது 28) ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க கப்பட்டனர்.

மற்றும் ஒருவர் சிறுகாயங்களுடன் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## கைவினைஞர்களுக்கான முன்னேற்ற செயற்றிட்ட பயிற்சி



(யாழ்ப்பாணம்)

தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் தொழிற் துறைத்திணைக்களத்தின் ஏற்பாட்டில யாழ் மாவட்ட கைவினைஞர்களுக்கான முன்னேற்ற செயற்திட்டமொன்று நேற்று முன்தினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் தேசிய அருங்கலைகள் பேரவையின் பிரதிப் பணிபபாளர் நவதர்ஷன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கைவினைபபொருட்களை தரமாக செய்வதற்கான நுட்பங்கள், கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்துதல், சந்தைப் படுத்தல் தொடர்பாக வளவாளர்களினால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் கொழும்பு பல்கலைக்கழக அழகியல் துறையை சேர்ந்த முப்பது மாணவர்கள் யாழ் மாவட்ட கைவினைஞர்களுடன் இச்செயற்றிட்டத்தில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

43. 50 சதத்தை ரூபாயின் தசமமாகக் கூறின்

1. 0.50 2. 0.050 3. 1.50

44. இடைவெளிக்குரிய இலக்கத்தைக் காண்க.

அவன் என்றால் ........................ 136

இவன் என்றால் ........................ 336


எவன் என்றால் ........................ ..........

1. 536 2. 756 3. 736

45. 3 ஆம் வகுப்பு சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தத் தொகை ரூ.9000.00 எனில், விற்ற சீட்டுக்களின் எண்ணிக்கையைக் காண்க. ........................

46. சீட்டுக்கள் விற்றுக் கிடைத்த மொத்தப் பணத்தைக் காண்க........................

**தரம் 4 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் காலை உணவின் விபரம் வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**




47. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

........................

48. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

........................

49. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக்குறைந்தளவானோர் உண்ட உணவுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ........................

50. இடியப்பம் உண்ட மாணவர்கள் எத்தனை பேர்?

........................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2015

பகுதி - I

# கல்வி முரசு

.30 மணி



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமானதன் கீழ் கோடிடுக.**

1. கைத்துடைப்பானைப் பாவித்தல்
   சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவுதல்
   உபகரணங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் } (சமைத்தல் / விற்றல்)

2. முட்டையிடும்
   ரீங்காரமிடும்
   சூழலுக்கு ஏற்ப இயங்கும் } (பறவை / எலி)

3. வளரும்
   வளையும்
   நிழல் தரும் } (மரம் / கொடி)

**பின்வரும் ஆங்கிலப் பதங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை இணைக்கவும்.**

| | |
|---|---|
| 4. Good Moring | நேர்முகப் பரீட்சைகளின்போது |
| 5. Happy Birthday | புதுவருடப் பிறப்பின்போது |
| 6. Good Luck | காலை வேளையில் |
| 7. Happy New year | பிறந்தநாள் நினைவூட்டலின்போது |

**8- 12 ஆகிய வினாக்களில் ஒரு சொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கோடிடுக.**

8. உண்ணும் , பிடிக்கும் , ஆறும்
9. அடைதல் , ஓடுதல் , வருதல்
10. கொடுத்தல் , பெறல் , விருத்தி
11. கூறுதல் , பாடுதல் , பேசுதல்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

12. சகல மனிதர்களுக்கும் நீர் அவசியம். எனினும் நகர வாசிகள் கிணற்று நீரை அருந்த மாட்டார்கள்.

  1. நகர வாசிகள் நீரை அருந்தமாட்டார்கள்
  2. நகர வாசிகளுக்கு கிணற்று நீர் கிடைக்காது
  3. நகர வாசிகள் கிணற்று நீரை அறியமாட்டார்கள்

13. பழச்சாறு போத்தல் ஒன்றில் 750 ml பானம் உள்ளது. விருந்துபசாரம் ஒன்றில் அவ்வாறான 10 போத்தல்கள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மொத்த பானத்தின் அளவு.

இரும்பினால் செய்யப்பட்ட கூட்டில் நான் தனியாக இருக்கிறேன். உணவும் வேறு தேவைகளும் எனக்குத் தாராளமாகக் கிடைத்தாலும், மனதில் நிம்மதி இல்லை. என்னை நன்கு கவனித்தாலும் தனிமையில் கழிக்கும் இவ்வாழ்க்கையில் என்ன நன்மை. சில வேளைகளில் என்னை அறியாமலேயே பறந்து செல்ல முயற்சி செய்கிறேன்.

14. மேற்கூறிய பந்திக்கிணங்க கூட்டில் அடைக்கப்பட்டிருப்பது.
1. குற்றவாளி ஒருவன் 2. பறவை ஒன்று 3. நாய் ஒன்று

15. பறந்து செல்லத் தேவையானது.
1. சிறகு 2. இறகு 3. கூடு

16. பின்வருவனவற்றுள் முலையூட்டி ஒன்று.
1. கழுகு 2. பூனை 3. முதலை

17. நன்மை என்பதற்குரிய எதிர்ச்சொல்
1. நன்கு 2. நன்று •3. தீமை

18. பந்தியில் உள்ள உலோகப் பொருள்
1. இரும்பு 2. உணவு 3. நிம்மதி

19. மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

20. மொத்தம் எத்தனை பழங்கள் பறிக்கப்பட்டன?

..........................................................................................

21. 3 பங்குகளாக்கப்பட்ட பின் ஒரு பங்கில் உள்ள பழங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................


22. ஒரு பங்கிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

23. ஒரு பங்கிலுள்ள ஜம்புப்பழங்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

24. தரப்பட்டுள்ள படத்தில் உள்ள கோலத்தைக் கவனித்து இடைவெளிக்குரிய எண்ணைக் காண்க.




i) 45 ii) 39 iii) 40

**தரப்பட்ட சிங்கள வசனங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

25. ஸ்துதிய ..........................................................................................

26. ஆயுபோவன் ..........................................................................................



**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கொழும்பு நகரம் பெரிய நகரம் - கோல அழகு கொண்ட நகரம்
மாடி மனைகள் நிறைந்த நகரம் - மக்கள் பலரும் விரும்பும் நகரம்

காலிமுகக் கடற்கரையும் - கவின் மிகு பல கட்டடங்களும்
தூர நின்று நாம் பார்த்திடவே - துலங்கும் பெரிய துறைமுகமும்

விரிந்த பரந்த வீதிகளும் எழில் - விளங்கும் கோவில் பள்ளி பலவும்
நிறைந்த நகரம் கொழும்பு நகரம் நிகரில்லாத பெரிய நகரம்

இந்து சமுத்திர ஓரத்திலே - மிக இனிதாய் அமைந்த ஒரு நகரம்
வந்து பலரும் பார்த்திடவே - வாஞ்சை கொள்ளும் பெரு நகரம்

27 இப்பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது?

..........................................................................................

28. இப்பாடலில் வரும் கடற்கரையின் பெயர் என்ன?

..........................................................................................

29. இப்பாடலில் வரும் சமுத்திரத்தின் பெயர் என்ன?

..........................................................................................

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்கள் தருக.**

30. பெரிய ..........................................

31. நகரம் ..........................................

32. தூர ..........................................

33. பரந்த ..........................................

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.**

34. அழகு ..........................................

35. முகம் ..........................................

36. வீதி ..........................................

37. வாஞ்சை ..........................................

38. கோவில் ..........................................

39. பெரிய ..........................................

40. கொழும்பு நகரம் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

..........................................................................................

41. இப்பாடலில் வரும் பெயர்ச் சொற்கள் மூன்று எழுதுக.

1).................... 2).................... 3)....................

42. இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள நாட்டின் பெயர் தருக.

..........................................................................................



தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய ஆசிரியர் தின விழாவின் போது விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் ஆசிரியை திருமதி திலகவதி திருச்செல்வம் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜாவால் கௌரவிக்கப்படுவதையும் பிரதம விருந்தினருக்கு நினைவுப் பரிசில் வழங்கப்படுவதையும் காணலாம். (01)

# கைவினை கலைஞர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சிறுதொழிற்துறை கைவினை கலைஞர்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடக்கவிருக்கும் மாநாடு தொடர்பிலான முதற் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறுதொழிற்துறை கைவினை கைப்பணி கைத்தொழில்துறைசார்ந்த கலைஞர்களையும் அவர்களது கைத்தொழிற்துறைகளையும் பலப்படுத்தி ஊக்குவிப்பதே இம் மாநாட்டின் நோக்கமெனத் தெரிவித்தார். இச்சந்திப்பில் அமைச்சரின் செயலாளர் வி.சிவஞானசோதி மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள், என பலரும் கலந்து கொண்டனர்.

## பொதுஅறிவுப் போட்டியில் காரை மாணவிக்கு தங்கம்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மாணவரிடையே நடத்திய இந்து சமய பொது அறிவுப் போட்டியில் காரைநகர் கிழவன்காடு அறநெறிப் பாடசாலை மாணவி தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

தரம் 4 இல் கல்விபயிலும் திருநீலகண்டசிவம் தர்சிகா என்ற மாணவியே இவ்வாறு தங்கப்பதக்கம் மற்றும் பரிசில்களை பெற்றுள்ளார்.

பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (50)

# சந்தையின் உட்பகுதியில் வெள்ள நீர் தேக்கம்

## சிரமத்தில் வியாபாரிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்தையில் மரக்கறி விற்பனை செய்யும் கட்டடத்திற்கும் பழ வியாபாரம் விற்பனை செய்யும் கட்டடத்திற்கும் இடைப்பட்ட பகுதி பள்ளமாக காணப்படுகின்றது. இதனால் மழை பெய்யும் வேளையில் வெள்ள நீர் அப்பகுதியில் தேங்கிக் காணப்படுவதாக வியாபாரகளும் நுகர்வோரும் தெரிவிக்கின்றனர்.

இதனால் வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வதில் இடையூறு ஏற்படுவதுடன் சந்தைக்கு தமது விற்பனைப் பொருட்களை எடுத்து வரும் விவசாயிகளும் பாதிக்கப்படுவதாகவும் அதாவது அதிகாலை வேளையில் இருள் அகல முன் சந்தைக்கு வரும் இவர்கள் வெள்ள நீருக்குள் விழும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்காதவாறு அதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் சீர் செய்ய வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் (85)

## இளைஞர்கழகம், சிறைச்சாலை இணைந்து

# மது ஒழிப்பு நடவடிக்கையாக யாழில் துண்டுப்பிரசுரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மது ஒழிப்பினை மேற்கொள்ளும் விதமாக யாழ். நகரப் பகுதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பயணிகளிடம் நேற்று முன்தினம் புதன்கிழமை மது ஒழிப்பு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட இளைஞர் கழகமும் யாழ். சிறைச்சாலையும் இணைந்து மது ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டினை யாழ். பிரதான வீதியில் முன்னெடுத்தார்கள். மது ஒழிப்பு சம்பந்தமான கையேடுகளை வாகனங்களில் ஒட்டியதுடன், வீதியில் பயணிக்கும் பயணிகளுக்கும் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மது ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டிற்கு யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எம். பெரேரா மற்றும் பிரதம சிறைச்சாலை பாதுகாப்பாளர் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். (25)

# வவுனியாவில் வீடு புகுந்து கொள்ளை பொருட்களுடன் ஒருவர் கைது

(வவுனியா)



வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கட்டட நிர்மாணத்துடன் தொடர்புடைய இயந்திரங்களை திருடினர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.ட.பி.ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் பட்டானிச்சூர் பகுதியில் திருத்த வேலை இடம்பெற்ற வீடு ஒன்றில் இருந்து கட்டட நிர்மாண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சுமார் நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான இயந்திர சாதனங்கள் திருட்டுப்போனமை தொடர்பாக வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து திருடப்பட்ட இயந்திர சாதனங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# போதிய மழைவீழ்ச்சி இல்லை காரைநகரில் தொடரும் வறட்சி

(காரைநகர்)

தற்போது பருவமழை காலம் தொடங்கியுள்ள போதிலும் காரைநகர் பிரதேசத்தில் தொடர்ந்தும் வறட்சி நிலை காணப்படுவதாகவும் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக போதியளவு மழை வீழ்ச்சி இன்மையால் கிணறுகளில் நீர் ஊற்றும் இல்லாத நிலையில் நீரை தூர இடங்களுக்குச் சென்றே பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குடிநீரை பணம் கொடுத்தே பெறவேண்டியுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குளங்களிலும் நீர்வரத்து குறைவாகவுள்ளதால் கால்நடைகளும் நீரின்றி அலையும அவல நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மழையை நம்பி வயல்களில் நெல் விதைக்கப்பட்ட நிலையில் நீரின்றி வயல்களும் வறண்டு காணப்படுவதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் இம்முறை மழை வீழ்ச்சி போதியளவு கிடைக்கா விடின் விவசாயம் முற்றாகப் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கின்றனர். (50)

# அச்சுவேலி–கொழும்பு புதிய பேருந்துசேவை

(அச்சுவேலி)

அச்சுவேலி-கொழும்புக்கான புதிய பேருந்துச் சேவை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலியிலிருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு 751 பாதை வழியாக தம்பாலை தொண்டமானாறு உடுப்பிட்டி வல்வெட்டித் துறை ஊடாக பருத்தித்துறையை வந்தடைந்து பருத்தித்துறையிலி ருந்து 8 மணிக்கு புறப்பட்டு நெல் லியடி கொடிகாமம் ஊடாக புத்தளம், பாதை கொழும்பு, வெள்ளவத்தை, தெஹிவளை ஊடாக ரத்மலானை வரை சேவையாறறவுள்ளது.

இதேபோன்று ரத்மலாணையில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு கடற்கரை வீதியூடாக வெள்ளவத்தை புகையிரத நிலையம் வந்து அங்கிருந்து 7.30 மணிக்கு புத்தளம் பாதை வழியாக கொடிகாமம் நெல்லியடி ஊடாக பருத்தித்துறை பஸ்நிலையத்தை அடைந்து 751 பாதை வழியாக வல்வெட்டித்துறை உடுப்பிட்டி, தொண்டமானாறு ஊடாக அச்சுவேலி வரை சேவை இடம் பெறவுள்ளதாக வடக்கு இ.போ.ச பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# வறுமையால் வாடும் குழந்தைகள் கிரீஸ் நாடு முதலிடம்

## ஐ.நா. தெரிவிப்பு



ஐ.நா. சபையின் 'யுனிசெவ்' நிறுவனம் செல்வச் செழிப்பு மிக்க 41 பணக்கார நாடுகளில் வறுமையால் வாடும் குழந்தைகள் குறித்த கணக்கெடுப்பை நடாத்தியது.

இதில் கிரீஸ் (40.5 சதவீதம்), முதல் இடத்திலும், லாத்வியா (38.2 சதவீதம்) 2ஆவது இடத்திலும், ஸ்பெயின் (36.3 சதவீதம்) 3'வது இடத்திலும் உள்ளன.


மேலும் இஸ்ரேல் 4ஆவது இடம் பிடித்துள்ளது. அங்கு 35.1 முதல் 35.6 சதவீதம் குழந்தைகள் பசியால் வாடுகின்றனர்.

பணக்கார நாடுகளில் தற்போது வறுமையால் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை 26 இலட்சம் ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேலில் வறுமை அதிகரிக்க வேலையில்லா திண்டாட்டமே முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

அங்கு இளைஞர்களுக்கு நிலையான வேலைகள் கிடைக்காததால் அவர்களால் அதிக அளவு பணம் சம்பாதிக்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் வறுமையில் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்த நாடுகள் பட்டியலில் நோர்வே முதலிடம் வகிப்பதுடன் இங்கு 5.3 சதவீதம் குழந்தைகளே பசியால் வாடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நிலோபர் புயல் நாளை குஜராத்தை தாக்கும் அபாயம்




குஜராத் கடற்கரையை நாளை சனிக்கிழமை 'நிலோபர்' புயல் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத்தொடர்ந்து, குஜராத் கடலோரப் பகுதியிலுள்ள 30 ஆயிரம் பேரை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும் பணி நடைபெற்றுவருகிறது.

ராஜஸ்தான் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் இப்புயல் மிதமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால், பொலிஸார் எல்லை பாதுகாப்புப் படையினர், அரசு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிலோபர் புயல் அரபிக் கடலில் உருவெடுத்து, குஜராத்தை நெருங்கியுள்ளது. நிலோபர் புயல் மிகத் தீவிரமானதாக இருக்கும் என வானிலை ஆய்வுமையம் எச்சரித்துள்ளது.

குஜராத் கடற்கரை அருகே கரையைக் கடக்கும் போது இப்புயல் மணிக்கு 60-70 கி.மீ என்ற அளவில் குறைந்து விடும். குஜராத்தின் கட்சி மாவட்டத்தில் இப்புயல் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# வெடித்துச்சிதறியது சரக்கு ரொக்கெட்



சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு தேவையான பொருட்களை ஏற்றிச் சென்ற, அமெரிக்காவின் ஆளில்லா சரக்கு ரொக்கெட், "அன்டார்ஸ்" கிளம்பிய சில நொடிகளில் தீப்பிடித்து வெடித்துச் சிதறியது.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்காக, ஆர்பிட்டல் விஞ்ஞான ஆய்வுகூடம் இந்த ரொக்கெட்டை தயாரித்திருந்தது. சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில், இரண்டு அமெரிக்கர்கள், ஒரு ஐரோப்பியர் மற்றும் மூன்று ரஷ்யர்கள உட்பட ஆறு விண்வெளி வீரர்கள் தங்கியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்லும் வகையில், 14 அடுக்குகளைக் கொண்ட இந்த ரொக்கெட் தயாரிக்கப்பட்டது.

அமெரிக்காவின் வேர்ஜினியாவில் உள்ள வாலாப்ஸ் பிளைஸ் ஏவுதளத்தில் இருந்து, இந்த ஆளில்லா ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்ட சில நொடிகளில் வெடித்துச் சிதறியது.

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் உள்ள வீரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே நான்கு முறை வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ள இந்த ரொக்கெட், இம்முறை தீபிடித்து வெடித்ததற்கான காரணம் தெரியவில்லை என்றும் நாசா நிறுவனத் தலைவர் டான் ஹாட் கூறியுள்ளார்.

# இராணுவ அதிகாரிகளின் தலைகள் துண்டிப்பு சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் வெறித்தனம்



சிரியாவில் சமீபத்தில் புதிதாக திறக்கப்பட்ட ஆளுனர் அலுவலகத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியபோது அவர்களை எதிர்த்து போரிட்ட ஏராளமான இராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகளை சிறைபிடித்து அங்கு அவர்களின் தலைகளைத் துண்டித்து கொலை செய்தனர். சுமார் 70 பேரை இவ்வாறு கொலை செய்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈராக் மற்றும் சிரியாவில் பல நகரங்களைக்கைப்பற்றிய 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகள் தனிநாடு அமைத்ததுடன் சிரியாவிலும் பல நகரங்களை தம் வசப்படுத்த தீவிரமாக போரிட்டு வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்பு சிரியாவில் கிழக்குப்பகுதியில் பெரிய நகரங்களில் ஒன்றான ரக்ஹாவை கைப்பற்றினர். தற்போது அடுத்த படியாக இட்லிப் நகரை கைப்பற்றி அங்கு கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

அது அலெக்போ மற்றும் கடற்கரை நகரமான லடாகியா இடையே உள்ளது. இவை அதிபர் பஷார் அல் ஆசாத்தின் ஆட்சியின் கீழ் உள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு நூற்றுக்கணக்கான ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் ஜப்கத் ஆல் - நுஸ்ரா தீவிரவாதிகள் இட்லிப் நகருக்குள் அதிரடியாக புகுந்து தாக்குதல் நடாத்தினர்.

மேலும், இட்லிப் நகரின் பெரும்பாலான பகுதிகள் தீவிரவாதிகளின் பிடிக்குள் சென்றுவிட்டது. அங்கு பல அரசு கட்டடங்கள் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

உலகச் செய்திகள்

# குர்து இன பள்ளி மாணவர்கள் 25பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆல் விடுதலை


சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கடத்தப்பட்ட 25 குர்து இன பள்ளி மாணவர்கள் விடுவிக்கப்பட்டதாக ஐ.நா. கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த மே மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கடத்தப்பட்ட 150 பள்ளி மாணவர்களுள் 25 பேர் விடுவிக்கப்பட்டதாக அங்கிருக்கும் ஐ.நா. கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளதாக சினுவா செய்தி நிறுவனம் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

குர்து இன மக்களை நோக்கி நடாத்தப்பட்ட தாக்குதலில் அலீபோ நகரை வசப்படுத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அங்கு மாணவர்கள் பலரைக் கடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# ஜமாத் உல் முஜாகிதீனின் முகாம்களை மேற்கு வங்கத்தில் அழிக்க வேண்டும்

## மத்திய உள்துறை அமைச்சர் உத்தரவு



மேற்கு வங்கத்தில் இயங்கி வரும் ஜமாத் உல் முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பின் முகாமகளை அழிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் உத்தரவிட்டுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் பர்த்வான் மாவட்டத்தில் உள்ள இல்லத்தில் கடந்த 2ஆம் திகதி குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்நதது. இது தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பினர் விசாரணை நடத்திவருகின்றனர். விசாரணையில் இந்த சம்பவத்தில் வங்கதேசத்தில் இயங்கி வரும் ஜமாத் உல்முஜாகிதீன் என்ற பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பிருப்பது தெரியவந்தது.

மேலும் இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டோரும் அந்த அமைப்புடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததும், அவர்களுக்கு தேவையான வெடிபொருட்களை தயாரித்து வழங்கியதும் கண்டறியப்பட்டது. இதைத் தொடரந்து இந்த விவகாரம் தேசிய அளவிலான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இதையடுத்து மேற்கு வங்கத்தில் இயங்கி வரும் ஜமாத் உல் முஜாகிதீன் அமைப்பின் முகாம்கள் அனைத்தையும் உடனடியாக அழிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கு ராஜ்நாத்சிங் உத்தரவிட்டார்.

இந்தச் சூழலில் ஜமாத் உல் முஜாகிதீன் பயங்கரவாத அமைபபைச் சேர்ந்த 20 முதல் 30 குழுக்கள் நாடு முழுவதும் பரவியிருப்பதாக பர்த்வா னில் விசாரணை மேற்கொண்டு வரும் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மேற்கு வங்கம், அஸாம் தென் பகுதிகளில் அவர்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது. முன்னதாக புலனாய்வு அமைப்புகளின் தலைவர்கள் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர் ஜியை சந்தித்து மாநில அரசின் ஒத்துழைப்பை உறுதிப்படுத்தினர்.

# வங்கதேச ஜமாத் தலைவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பு



வங்கதேசத்தின் ஜமாத் -இ-இஸ்லாமி கட்சியின் தலைவர் மோதிர் ரகுமான் நிஜாமிக்கு நேற்று முன்தினம் அந்த நாட்டு சிறப்பு தீர்ப்பாயம் மரண தண்டனை விதித்தது. 1971ஆம் ஆண்டு வங்கதேச விடுதலைப்போரின் போது ஜமாத் தலைவர்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற் பட்டனர். அப்போது அவர்கள் ஆயிரக்கணக்கா னோரை கொன்று குவித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்குகளை சிறப்பு தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது.

ஜமாத் தலைவர் நிஜாமி (வயது-71) விடுதலைப் போராட்ட வீரர்கள் பலரைப் படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

வங்கதேச போர்க் குற்றத்தில் தண்டனை பெற்றுள்ள 6ஆவது ஜமாத் தலைவர் நிஜாமி. இந்தக் குற்றம் தொடர்பாக மேலும் இரு ஜமாத தலைவர்கள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. நிஜாமியின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட வாய்ப்புள் ளதால் வங்கதேசத்தில் பதற்றம் நிலவுகிறது.

# அரசியல் யாப்பில் 18 ஆவது திருத்தம் அகற்றப்படுவது மிகவும் அவசியம்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையில் கோரிக்கை

அரசியல் அமைப்பின் 18ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் இலங்கை தொடர்பில் மீளாய்வு செய்து அறிக்கை தயாரித்திருந்தது.

இந்த அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் நாட்டு மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள ஒரு சில விடயங்கள் வரவேற்கப்பட வேண்டியதென தெரிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட 18ஆம் திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

18ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக அரசியல் சாசன சபை இரத்து செய்யப்பட்டு நீதிமன்றம் மற்றும் ஏனைய சுயாதீன நிறுவனங்களுக்கான நியமனங்களை மேற்கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.நீதிமன்றம் மற்றும் ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நியமனங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பக்கச்சார்பற்ற அணுகுமுறைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது எனவும் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கமிட்டி தெரிவித்துள்ளது.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவரகள் சமூகத்துடன் மீள இணைக்கப்படும் நடவடிக்கையானது வரவேற்கப்பட வேண்டியது என தெரிவித்துள்ளது.

ஆண், பெண் பால் நிலை சமத்துவத்தை உறுதி செய்யவும் பெண்களின் உரிமைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளது. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என குறிப்பிட்டுள்ளது.

அரசியல் சாசனம், சட்டக் கட்டமைப்பு, நீதிமன்றின் சுயாதீனத்தன்மை, வாழ்வதற்கான உரிமை, பலவந்தமான காணாமற் போதல்கள், கருத்துச் சுதந்திரம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைகுழு செய்துள்ள பரிந்துரைகள் தொடர்பில் ஓராண்டு காலத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# பொது அறிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டோர்




கடந்த மே மாதம் இடம் பெற்ற சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நல்லூர் வாழ்வெழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தினால் (நல்லூர் சமுர்த்தி மகாசங்கம்) நடாத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றோரை நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் குலுக்கல் மூலம் நேற்றைய தினம் தெரிவு செய்தார்.

இதன்படி பரிசில் பெறதெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

1ஆம் பரிசு, வி.கௌரிதாசன் (யாழ். ஆனைப்பந்தி மெ.மி.வி. (தரம்- 5),2ஆம் பரிசு கிறிஸ்ரிக்கா கிருபாகரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (தரம்- 9), 3ஆம் பரிசு ச. தமிழ்விழி (யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம் (தரம்- 3), 4ஆம் பரிசு, நே.ஜதுசன் (யாழ்.செங்குந்தா இந்துக்கல்லூரி (தரம்- 6), 5ஆம் பரிசு இ.கஸ்தூரி (யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயம் (தரம்- 10). தெரிவு செய்யப்பட்ட மேற்படி மாணவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (26)

# நாடு முழுவதும் மேலும் 1100 மருத்துவர்கள் நியமனம்

இலவச மருத்துவ சேவையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் 1,100 மருத்துவர்களும் 5,000 தாதிகளும் நியமிக்கப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுகாதார பிரிவின் வரலாற்றில் அதிக தொகை இம்முறை வரவு செலவிலேயே ஒதுக்கப்பட்டுள்ளது. 181 பில்லியன் தொகை சுகாதார் சேவைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தனியார் சுகாதார சேவை எத்தனை உருவானாலும் அதனுடன் போட்டிபோடுமளவுக்கு இலவச மருத்துவ சேவையும் இந்நாட்டில் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறது. மேலும் வலுப்பெறுகிறது என அவர் தெரிவித்தார்.

# இலவச மருத்துவ சேவைக்கு 181 பில்லியன் நிதி ஒதுக்கீடு

இலவச மருத்துவ சேவைக்காக 181 பில்லியன் ரூபா 2015 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவில் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இத்தொகை 155 பில்லியனாக இருந்தது என்றும் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹெரிசன் நேற்று நாடாளுமன்றில கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தேசிய வரவுசெலவில் சுகாதாரசேவைக்கு நிதியொதுக்குவது போலவே மாகாண சபைகளுக்கும் நிதியொதுக்கப்படுகிறது.

அனைத்து வைத்தியசாலைகளுக்கில்லாவிட்டாலும் பெரும்பாலான வைத்தியசாலைகளுக்கு மருந்துக்களஞ்சியங்கள் குளிரூட்டப்பட்டு அனைத்து வசதிகளுடனும் அமைத்துக்கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலவச வலுவூட்டல் திட்டத்தினூடாக வைத்தியசாலைகளுக்கு குளிர்சாதனப்பெட்டிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தொடர்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தொன்றுக்கு பதிலளித்த பிரதிசுகாதார அமைச்சர், ரஜரட்டவில் பிறந்த தலைவர் மற்றும் கட்சியின் மிகவும் பழைமையான உறுப்பினர் என்ற வகையிலும் எதிர்காலத்திலும் அமைச்சராகும் தகுதி அவருக்குண்டு என்று தெரிவித்தார்.

# மருத்துவ ஆய்வு கூடங்களுக்கு இனி அனுமதிவேண்டும்

தனியார் மருத்துவ ஆய்வு கூடங்களை நடாத்துவதற்கு எதிர்காலத்தில் சுகாதார அமைச்சின் அனுமதி மற்றும் பதிவு அவசியம் என பிரதிச் சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விராஜ் காரியவசம் நேற்று நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.தற்போதைக்கு 721 தனியார் மருத்துவ ஆய்வுகூடங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இவற்றை கண்காணிக்கின்றனர். சரியான அறிக்கையை வழங்க தவறும் ஆய்வுகூடங்கள் தொடர்பில் முதலில் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. தொடர்ந்து ஆராயப்படுகிறது. சில ஆய்வுகூடங்கள் மூடப்பட்டும் உள்ளன.

இவ்வரசு ஜனநாயகத்தை பாதுகாப்பதைப் போலவே இலவச மருத்துவ சேவையையும் பாதுகாக்கிறது. அரச மருத்துவமனைகளில் பரிசோதனை செய்யப்படவில்லையென்று கூற முடியாது. அவற்றில் அனைத்து பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

விசேடவிதமாக டெங்கு நோய் காய்ச்சல் தொடர்பில் பல பரிசோதனைகள் வைத்தியசாலைகளிலேயே நடத்தப்படுகின்றன. இலங்கையில் 601 அரச வைத்தியசாலைகள் செயற்படுகின்றன. இலவச மருத்துவ சேவை இந்த நாட்டில் சிறப்பாக செயற்படுகிறது.

வைத்தியசாலை ஆய்வு கூடங்களை எடுத்துக்கொண்டால் சில ஆய்வுகூடங்களில் பிரச்சினையிருந்தாலும் எல்லா வைத்தியசாலையிலும் அவ்வாறில்லை. சில குறைபாடுகள் இருக்கலாம். எனினும் பொதுவாக சுகாதார சேவையில் குறையுண்டு என்று கூற வேண்டாம். சிறந்த சேவை வழங்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய சங்கத்தால் மருந்துகள் விநியோகம்

அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகள் தேசிய விற்பனை சங்கத்தால் விநியோகிக்கப்படவுள்ளன. வெளிநாடுகளில், சர்வதேச நிதி நிறுவனங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே வழங்கப்படுகின்றன என பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் நேற்று நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### துயரத்தில்...

கொள்வதோடு, பெற்றோரை இழந்து அநாதரவாக நிற்கும் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் தேவைகள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் அவதானத்துடனும், மனிதாபிமானத்துடனும் செயற்பட்டு அந்தச் சிறுவர்களை அரவணைத்துப் பாதுகாக்க வேண்டுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரை பத்துப்பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ள அதே வேளை சரிந்த மண்ணுக்குள் மேலும் சுமார் முந்நூறு பேர் சிக்குண்டிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்ற செய்தியை கேட்டு ஆறாத துயரமடைந்தேன். மனது மறக்க முடியாத இந்த துயரத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### மாகாணசபை...

திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் மற்றும் இலங்கை நிர்வாக சேவையின் மூத்த பெண் அதிகாரியொருவரையும் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு உரிய விசாரணையை மேற்கொண்டு ஒருவார காலத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்.

இதேவேளை குறிப்பிட்ட நிதி மோசடியுடன் தொடர்புடையவர்கள் எனக் காணப்படும் ஏனைய அலுவலர்களும் இடைநிறுத்தப்பட்டு விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

### டிசம்பரில்...

வருடங்களில் ஏற்படப்போகின்ற மிகப்பெரிய சூரிய மண்டல புயலாகும்.

216 மணித்தியாலங்கள் தொடர்ந்து இருள் நீடிப்பதால் ஆறு நாட்கள் பூமியில் மின் விளக்குகளுடனேயே செயலாற்ற வேண்டி வரும் என்று குறிப்பிட்டார்.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை நாசா இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென விஞ்ஞானி ஏர்ல் கொடோயில் தெரிவிக்கின்றனர்.

### விபத்தில்...

என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்துடன் சம்பந்தப்பட்ட மினி பஸ் சாரதி சுன்னாகம் பொலிஸில் சரணடைந்துள்ளார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

### நாடு...

அடங்கிய பட்டியல்கள் துரிதமாக தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை அந்தந்த பிரதேச செயலர்கள் மத்தியஸ்த சபை உறுப்பினர்களுடன் இணைந்த வகையில் தயாரிக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (05)

### நிதிமோசடி....

யில் பிரதான பங்கு வகித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகள் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மூலமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவரை விசாரணைகளினை குழப்பாத வகையில் பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜெகூ, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் ஆகியோர் இடைநிறுத்தப்பட வேண்டும்.

இதேவேளை உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சரும் பக்கசார்பின்றி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். (பா)

# இந்திய மீனவர் ஐவருக்கு தூக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

## இலங்கையர் மூவருக்கும் இதே தண்டனை

(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்திய இலங்கை கடல் எல்லையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஐந்து பேர் மற்றும் இலங்கை மீனவர்கள் மூவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் பத்மா சூரசேன தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பு அளித்தார்.

கடலில் போதைவஸ்து கடத்தலின் போது, போதைப் பொருள் பரிமாறியதாக, சந்தேகத்தின் பெயரில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட நிலையில் கொழும்பு மேல் நீதமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

நேற்று 7 ஆம் இலக்க கொழும்பு மேல் நீதிமன்றில் நீதிபதி பத்மா சூரசேன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்தக் கொள்ளப்பட்டவேளை இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பு வழங்கினார்.

இந்திய மீனவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இத் தீர்ப்பு இலங்கை இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்தும் எனவும் வாதிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த பிலாடுதீன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் தேதி மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 5 பேரை போதை பொருள் கடத்தியதாக இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு, கடந்த மூன்று ஆண்டுகளாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கில் நீதிபதி பத்மா சூரசேன நேற்று தீர்ப்பு வழங்கினார்.

இதில், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் எமர்சன், வில்சன், அகஸ்டன், லாங்லெட், பிரசாந்த் ஆகிய 5 பேர் உள்பட இலங்கையைச் சேர்ந்த மூன்று மீனவர்களுக்கும் தூக்குத் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இதனிடையே தமிழக மீனவர்கள் மீது தொடரப்பட்ட போதைப் பொருள் கடத்தல் வழக்கு பொய்யான குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கு என மீனவர்கள் சங்க பிரதிநிதி பாரதி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விவகாரத்தை மத்திய அரசு துளியும் கண்டு கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டிய அவர், இனிமேலாவது மத்திய அரசு தலையிட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 5 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாரதி வலியுறுத்தி உள்ளார்.

இதனிடையே, தூக்குத்தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய தமிழக மீனவர்களுக்கு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

# மண்சரிவில் வீடு இழந்தவர்களுக்கு அதிகார சபையூடாக வீடுகள்

(பதுளை)

• பதுளை ஹல்துமுல்ல, கொஸ்லந்த - மீரியாவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண்சரிவினால் வீடுகள் இழந்தவர்களுக்கு ஜன செவன தேசிய வீடமைப்புத் திட்டத்தினூடாக வீடுகள் நிர்மாணித்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நிர்மாணத் துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

அவர்களது முன்னைய வீடுகள் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து பார்க்குமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிரதான காரியாலயத்திற்கும், தேசிய வீடமைப்பு சபையின் பதுளை மாவட்ட காரியாலய அதிகாரிகளுக்கும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த குடும்பங்கள் தற்காலிகமாக தங்கியுள்ள இடங்கள் குறித்தும் ஆராயுமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

# 300 குடும்பங்கள் இடமாற்றப்பட்டுள்ளனர்

நுவரெலியாவில் மண்சரிவு அபாயம் நிலவும் பகுதியிலுள்ள 300 இற்கும் அதிகமான் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 200 பேரை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய் மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பீ. ஜி.குமாரசிறி தெரிவிக்கின்றார்.

நுவரெலியா பிரதேச செயலர் பிரிவில் இதுவரையில் 104 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களின் வீடுகளில் இருந்து அப்புறப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்..

# அராலியில் குண்டு மீட்பு

(அராலி)

யாழ்ப்பாணம், அராலிச் சந்தியில் இருந்து 81 மில்லிமீற்றர் எறிகணை ஒன்று நேற்று மீட்கப்பட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

அராலி சந்தியில் குப்பைகள் கொட்டும் இடத்தில் எறிகணை ஒன்று இருப்பதாக பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இராணுவத்தினருடன் சென்று எறிகணையை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்விடத்திலேயே இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவால் எறிகணை செயலிழக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கொடிகாமம் - நெல்லியடி வீதியை புனரமைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்திலிருந்து, நெல்லியடி வரையிலான வீதியைப் புனரமைத்து தருமாறு நெல்லியடி வர்த்தகர் சங்க உப தலைவர் ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளர் ஊடாக வீதியைப் புனரமைக்க பெருந்தோட்ட வீதி அமைச்சுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வீதி கடந்த 30 வருட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாக பழுதடைந்து காணப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

மேலும் கொழும்பு-யாழ்ப்பாணம் வரை யாழ்தேவி புகையிரதம் தொடங்கிய நிலையில் இவ்வீதி புனரமைப்பு அத்தியாவசிய தேவையாக மாறியது. இதனால் இவ்வீதிப் புனரமைப்பு தொடர்பில் நெல்லியடி வர்த்தக சங்க உப தலைவர் இ.அகிலதாஸ் ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கையை அடுத்த உடனடியாக ஜனாதிபதியின் மூத்த செயலாளர் அன்ரன் பெரேரா பெருந்தோட்ட வீதி அமைச்சிற்கு குறித்த வீதிப் புனரமைப்பிற்கு சிபார்சு செய்து கடிதம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதத்தின் மூலப்பிரதி நெல்லியடி வர்த்தக சங்க தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(18)

# கால்நடை திருடியவர் வசமாக மாட்டினார்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தொடர்ச்சியாக மாடுகளைக் களவாடியதாக கூறப்படும் நபர் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய வேளையில் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

தொடர்ச்சியாக 3மாதகாலத்துக்கு மேலாக பொலிசாரின் வலை வீச்சிலிருந்து தலைமறைவாகியிருந்த நபர் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். (170)

# வவுனியா தமிழ் ம.மகா வித்தியாலயத்தில் வடமாகாண பண்பாட்டு பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்தும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா - 2014 நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இதில் நாளை காலை 9.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் ஆய்வரங்கு நிகழ்வை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

வரவேற்புரையை பருத்தித்துறை கலாசார உத்தியோகத்தர் சே.செல்வசுகுணா வழங்கவுள்ளதுடன், தொடர்ந்து இலங்கைத் தமிழ் இலக்கியங்களினூடாக மொழித்திறனும், இலக்கியப் பயில்வும் (2013இல் நடைபெற்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு) நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை கரவெட்டி கலாசார உத்தியோகத்தர் அ.சிவஞானசீலன் வழங்கவுள்ளார். தொடர்ந்த ஆய்வரங்கம் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணியளவில் வவுனியா இறம்பைக்குளம மகளிர் கல்லூரியில் கலாபூஷனம் பொ. கனகரத்தினம் அரங்கில் நடைபெறும் மாலை நிகழ்வு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.இந்திய பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் வரவேற்புரையை யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரத்தினம் வழங்கவுள்ளார். தொடர்ந்து வவுனியா நிருத்திய சுருதி நாட்டியக் கலாலய மாணவர்களின் மீனவ நடனம், முல்லைத்தீவு கள்ளபாடு அ.த.க. பாடசாலை மாணவர்களின் காலிங்க நடனம், வவுனியா இசை ஆசிரியர்களின் இசைச்சங்கமம், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் றபான் நடனம் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்த தேசத்திற்கு மகுடம் நிகழ்விற்கான மாகாண மட்டப் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரி அரங்கில் வடமாகாண கல்வியமைச்சர் செயலாளர் தலைமையில் மாலை அரங்கு இடம்பெறும்

# ஏ-9 வீதியில் விபத்து; இருவர் உயிர் தப்பினர்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் ட்ரக் வாகன விபத்தில் பளை பிரதேச சபை அலுவலர்கள் இருவர் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை முகமாலையில் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பளைப்பிரதேச சபைக்குச் செல்வதற்காக யாழில் இருந்து மோட்டார் சைக்கிளில் இருவர் வந்து கொண்டிருந்த வேளை முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வாகனம் திடீரென பின்பக்கமாக (ரிவேர்ஸ்) சென்றது.

அதேநேரம் மோட்டார் சைக்கிளில் வந்த அலுவலர்கள் இருவரும் வாகனம் வருகின்ற திசைக்கு எதிரே எதுவும் செய்ய முடியாது மோட்டார் சைக்கிளை விட்டுப் பாய்ந்தனர்.

இந்நேரம் தொண்டு நிறுவனத்தின் வாகனம் மோட்டார் சைக்கிள் மீது ஏறிச் சுக்குநூறாகியதாக தெரிவிக்கப்படுகிறது. (05,37)

# உறுப்பினர் கனகரசன்; அதிகாரிகளால் பாராட்டு

அரச சேவையில் பிரதி நில அளவையாளர் நாயகமாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின் அகில இலங்கை சமாதான நீதவானாக கடமையைப் பொறுப்பேற்ற பண்ணாகம் சரவணமுத்து கனக்ரசனை நேற்று வலி. மேற்கு அரச அதிகாரிகள் பாராட்டியுள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரான சரவணமுத்து கனகரசனின் புதிய சமாதான நீதவான் சேவை பாராட்டு விழாவில் பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலர் ம.சிவராதன், வலி.மேற்கு பிரதேச செயலர் அலுவலக கிராம அலுவலர் மகேஷ்வரன் ஸ்ரீமுருகவேள் மற்றும் ஆலய தர்மகர்த்தக்கள் பாராட்டியுள்ளனர். (05)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் இருந்து சடலமாக சங்கரத்தை பாடசாலை வீதியைச் சேர்ந்த சின்னையா சூரியகுமார் (வயது-50) நேற்று மீட்கப்பட்டார்.

சங்கானை கிழக்கு ஓடக்கரை பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டு மல்லாகம் நீதவானின் உத்தர வின்பேரில் மேலதிக விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.